நெருங்கிய பொருள் கைப்பட வேண்டும்!

கவிதைகள்



லினோதினி

நெருங்கிய் பொருள் கைப்பட வேண்டும்!

லினோதினி சண்முகநாதன்

மணிமேகலைப் பிரசுரம்
தபால் பெட்டி எண்: 1447,
7 (ப.எண்: 4), தணிகாசலம் சாலை,
தியாகராய நகர், சென்னை – 600 017.
தொலைபேசி: 24342926, 24346082
மின் அஞ்சல் : manimekalai1@dataone.in
இணைய தளம் : www.tamilvanan.com

நூல் விவரம்

நூல் தலைப்பு	**நெருங்கிய பொருள் கைப்பட வேண்டும்!**
ஆசிரியர்	**வினோதினி சண்முகநாதன்**
உரிமை	ஆசிரியருக்கே
மொழி	தமிழ்
பதிப்பு ஆண்டு	2011
பதிப்பு விவரம்	முதற் பதிப்பு
தாளின் தன்மை	மேப்லித்தோ
நூலின் அளவு	கிரௌன் சைஸ் (12 X 18 செ.மீ.)
அச்சு எழுத்து அளவு	10.5 புள்ளி
மொத்த பக்கங்கள்	152
நூலின் விலை	₹ 60/-
அட்டைப்பட ஓவியம்	றோக்கி சண்முகநாதன்
லேசர் வடிவமைப்பு	ஸ்ரீ விக்னேஷ்வரா கிராஃபிக்ஸ், போன் : 2650 3802.
அச்சிட்டோர்	பி.வி.ஆர். ஆப்ஸெட், சென்னை–94.
நூல் கட்டுமானம்	தையல்

சமர்ப்பணம்

திருமதி. அன்னமேரி ஸ்ரோணர் தம்பிமுத்து

காலப் பெருந் தலைவன்
காட்டிவிட்ட பாதையிலே – இந்
நீளப் பெருவுலகை நீ மறந்து
நீள் துயிலில்! – அம்மம்மா!
தமிழ் ஆளப் பிறந்த எந்தன்
அழகு தமிழ்க் கவிதையெல்லாம்,
அன்பை வணங்கி – நின்
அடிகளுக்கே சமர்ப்பணமே!

உள்ளே

பகுதி 1

கடவுள் வாழ்த்து

1. தமிழ்பாட அருள்வாய் - 39
2. பரம்பொருள் தந்ததே - 40
3. நல்லறிவீந்தாய்! - 41

தமிழ்த்தாய் வாழ்த்து

4. ஆன்ற மொழிகளில் - 42
5. தேன் தமிழே தாய்த் தமிழே - 44

மாவீரர் வணக்கம்

6. கார்த்திகை 27 - 45
7. கை தருவாரினி யாரோ? - 47

கவியரங்கக் கவிதைகள்

8. இயற்கையைப் பாடுவோம்! - 48
9. சுனாமி கண்ணீர்க் கவிதை - 52
10. சுனாமி ஆற்றுபடுத்தற் கவிதை - 56
11. தைமகள் வருகவே! - 59

சுதந்திரமும், பெண் விடுதலையும்

12. சுதந்திரம் - 65
13. பொன் விலங்கு - 66

14. மூடிய முகத்திரை கிழித்து - 68
15. அக்கினிப் பறவை - 69

சின்னஞ் சிறு கிளியே
16. மழலையின் சிரிப்பு - 70
17. கல்லுடைக்கும் தொழிலில் சிறார்கள் - 71
18. வறுமையிலும் செழுமை - 73
19. சிறு வயதிற் குடும்பச் சுமை - 75

அம்மா
20. அம்மா - 77
21. கருவாக எனைச் சுமப்பாயா? - 79

காதல்
22. என்னில் நீயாக வா! - 81
23. அறியாத பருவத்துக் காதல் - 83
24. உண்மைக் காதலெது? - 85
25. அழுகை - 87
26. எங்கும், எதிலும் நீ! - 88
27. காதலில் தொலைந்த கணங்கள் - 90
28. களத்தில் இருக்கும் வீரனுக்கு... - 94

உன்னால் முடியும்
29. சூரன் போர் - 98
30. ஒளியிழந்த கண்களிலே - 100
31. ஆமையும், முயலும் - 102
32. அடிமைக் கூட்டைத் திறவாயோ? - 104

இயற்கையும் மனிதனும்
33. பனை மரம் - 106
34. புயல் - 107
35. இயற்கையும் மனிதனும் - 108

மென்மையும் வன்மையும்
36. சினிமாப் பெண்மை - 110
37. நாகரிக மங்கை - 11
38. ஔவையார் - 11

விண்ணப்பம்
39. மனித நேயம் - 11
40. உழைக்கும் கரங்கள் - 11

புலம்பல்
41. வலிகளை ஏன் மறைத்தீர்? - 1
42. ஞானம் - 1
43. விடியலைத் தேடி - 1
44. ஆன்மா இறைவனோடு இணைந்த நிலை - 1
45. கல்வி - 1

பிரிவும், வாழ்த்தும்
46. எம்முடனே வாழ்கின்றாய்! -
47. அரியவற்றுளெல்லாம் அரிது -
48. நூறு பத்தாண்டு வாழ்க! -

பகுதி 2

இறைவனும் நானும்

1. இறைவா எனைத் துன்பத்தில் - 141
2. எத்திக்கும் அன்பில்லைலே! - 142
3. மெய்யறிவு - 144
4. நினை ஓதும் பணியருள்வாய்! - 145
5. கவி ஊறுதே...! - 145
6. மீளும் வகையருள்வாய்! - 146
7. நெஞ்சம் மறந்திடுமோ? - 147

வாழ்த்துரை

R.Pandiarajan
#18 NEW 21, SIVASAILAM STREET, T.NAGAR, CHENNAI - 600 017, INDIA
Ph : 28344254 E.Mail : pallavar@yahoo.com

திருமதி. லினோதினி சண்முகநாதன் அவர்களுக்கு
வணக்கம்.

'சேலை கட்டிய பெண்ணிவளைச்
சாலைக்கும் விட மாட்டார்!
குனிந்த உன் தலையை நிமிர்த்து'
துணிந்து பொன் விலங்கு தகர்த்து! '

உங்கள் எழுத்தில் விடுதலை ஏக்கம் இருக்கிறது. பொன் விலங்கு இனி உங்களுக்கு வளையல்தான். வாழ்க்கைப் பாதையில் வெகுதூரம் நடந்து என் கால்கள் வலிக்குதம்மா! என்று எழுதியிருக்கிறீர்கள் உங்கள் எழுத்தின் வலிமையைப் படிக்கும் போது நீங்கள் வந்த பாதை குறைவு - போக வேண்டிய பாதை நெடுதூரம் இருக்கிறது. உறவுகள் முறிவது மனிதனின் சீற்றம் என்கிறீர்கள். நீங்களும் மனிதர் தானே. சீற்றத்தைச் சிறிதாக்க உங்களுக்குச் சிந்திக்கத் தெரியாதா? விற்பனைப் பொருளாய்ப் பெண்களைக் காட்டிச் சினிமா வித்தைகள் புரியும் பல மனிதர்? என்று எழுதியிருக்கிறீர்கள். சிறு திருத்தம் 'பல மனிதர்' என்பதை 'சில மனிதர்' என்று மாற்றியிருந்தால் மனசுக்கு இதமாக இருக்கும்.

தெளிவு பெற விழிப்பாய்!
தொடரும் பகை ஒழிப்பாய்!
தோல்வி கண்டும் சிரிப்பாய்!
தோல்வி உன்னில் தோற்றுவிடும்
விந்தை காண்பாய்!

அற்புதமான தன்னம்பிக்கை வரிகள் - உங்கள் கவிதை உலகை விசாலமாகப் பார்ப்பவர்களுக்கு நல்ல விதை!

மகிழ்ச்சியுடன்
உங்கள்
(R. பாண்டியராஜன்)

You Become successful
by helping
others become successful

லினோதினி ஒரு புது வரவு

பாரிசில் பல ஆற்றல் மிகு இளம்பெண்களின் வரிசையில் லினோதினி சண்முகநாதன் ஒரு புதுவரவு. இவர் கலை இலக்கியச் செயற்பாடுகளில் ஆர்வமுடையவர். அரங்க அறிவிப்பாளராகவும், பாடகியாகவும் இவர் அறிமுகமானவர். பிரெஞ்சுத் தமிழ்த் தளத்தில் இவருடைய கணவர் சிறந்த இசையமைப்பாளராக அறியப்பட்டவர். பல விடுதலைப் பாடல்களை காலத்தின் தேவைகருதி இசைத்து வருகிறார். இவருடைய குடும்பம் இராணுவ ஆக்கிரமிப்பின் காரணமாக தாயகத்தைவிட்டுப் புலம்பெயர நேர்ந்தது.

அடர்ந்த பனந்தோப்புகளும், தென்னை மரங்களும் நிறைந்த அழகிய ஏழாலை கிராமத்தில் பிறந்து வளர்ந்தவர். அத்தகைய கிராமியச் சூழலில் தத்தித்தத்தித் திரிந்து தாய்மொழியாம் தமிழைக் கற்கிறார். திக்குத் தெரியாதலைந்து திரியும் வாழ்க்கையை வாழ நேரிட்டபோதும் தன் தாய்மொழியை வாழ்வின் திசைகாட்டும் மொழியாக தன்னுள் வரிக்கிறார். விடுதலைக்கான தீயை தன் மனத்தில் மூளவிடுகிறார். வற்றாது பாயும் கண்ணீரால் தனது வாழ்வை எழுதுகிறார்.

தனது சகதோழிகளை நோக்கி இரங்குகிறார், வினவுகிறார், அறைகூவல் விடுகிறார். பொய்மைகளுக்குள்ளும் போலித்தனங் களுக்கும் அலங்காரங்களுக்குள்ளும் ஆசை வார்த்தைகளுக் குள்ளும் சிறைப்பட்டிருக்கும் பெண் - வாழ்க்கையை விட்டெழ வேண்டும் என்ற ஆதங்கம் அவரிடம் மேலோங்குகிறது. அது அவரின் கவிதைகளில் தெறிக்கின்றன.

மேட்டுமைக்காக, பகட்டிற்காக நகைநட்டுகள் அணியும் கலாசாரத்தைக் கொண்ட பெண்களை பொன்விலங்கு மாட்டிய வர்களாகக் காட்சிப்படுத்துகிறார். அத்தகைய உணர்வின் வெளிப் பாட்டை கவித்துவ ஆளுமைமூலம் கொண்டுவர உழைக்கிறார்.

தனது தாய்மொழி அழிந்துவிடுமோ என்கிற அச்சம் அவருள் நிறைந்திருக்கிறது. தனது 'அம்மா'வைப்பற்றிப் பாட முனையும்போது,

உனது இதயத்தை மிதித்துவிட்டு
கனமான கவலையில் உன்னைத் தேங்க விட்டேன்.

அதை எண்ணும் பொழுதெல்லாம் அவர் கண்கள் குளமாகிறது.

நிலவின் கீழ் இருந்த வாழ்வும் அமுதூட்டிய தாயின் முகமும் அவர் ஞாபகங்களில் அலைகளாகப் புரளும் சோகம் அவரைச் சாதாரண ஆளாக நின்று புலம்ப வைக்கிறது.

அம்மா!

இன்னும் ஒரு ஜென்மம் எனக்கிருந்தால் துடியாய்த் துடிக்கும்
என்னுயிரை கருவாகச் சுமப்பாயா?

மேலும், அவர் பாவமன்னிப்புக் கோரும் பாங்கிலமைந்த அந்தப் பா மூலம்,

துன்பக் காற்றின் வெப்பத்தில்
நான் கருகிப் போகுமுன்
தென்றலாக வருவாயா...?
கால் வலிக்குதம்மா
நிழலாக நீ வருவாயா?
சுவாசமாக நீ வருவாயா?

எனப் பாடுகிறார்.

'தனது ரொட்டித் துண்டுக்காக தன் நெற்றி வியர்வையைச் சிந்தும் உழைப்பாளி மேலானவன்' என பைபிளில் எழுதப் பட்டிருக்கிறது. பக்தி இலக்கியங்களிலும் கூட,

'மங்கும் பொழுதெலாம் வாடித் தொழில் புரியும்
மக்களெலாம் மகேசன் வடிவல்லவோ!'

எனக் குறிப்பிடப் பட்டிருக்கிறது.

ஔவையாரும் குரல் கொடுத்திருக்கிறார். லினோதினியாரும் தன் பங்கிற்குக் குழந்தைத் தொழிலாளரின் கொடுமையைக் கண்டு கோபமுறுகிறார். குழந்தைகளின் சிரிப்பைக் காண்பதற்காக எழுது கோலையும் கருவியாக உயர்த்தக் கோருகிறார்.

பூமி நடுக்கம், புயலின் சீற்றம், சுனாமி, வெப்பமுயர்தல், பனிப்பாறைகள் உருகுதல், கடலில் நீர்மட்டம் உயருதல் என இயற்கையின் மீது வீழ்ந்த சகல உபாதைகளுக்கும் மனிதகுல விரோதிகளே காரணம் எனச் சாடுகிறார்.

லினோதினி பூமித்தாய் மீதான பற்றுணர்வு கொண்டவராகவும், காய்த்த மரங்களின் மீதான நன்மதிப்புணர்வு கொண்டவராகவும் நன்றியுணர்வுத் தளத்தில் நின்று எழுப்ப முயலும் கவிதைகளில்,

'மரம் போல் மனிதன் சிறக்க வேண்டும்'

எனக் கேட்கிறார்.

அடுத்து,

துடுப்பிழந்த தோணியென
நடுக்கடலில் நாங்கள்
எனினும் நம்பிக்கைத் துடுப்பெடுத்தோம்!

வாழ்வின் மீதான காதல் வெளிப்படுகிறது.

அன்பே பொதுமொழி
இதை உணர்ந்தால்
பிறக்கும் புது வழி!

வாழ்க்கைப் பாதையைச் செப்பனிடத் துடிக்கும் அவரின் பாங்கிற்கு ஓர் உதாரணம்.

நிலத்தை, நீரை, ஆகாயத்தை, நெருப்பை,
இயற்கை எழிலை எல்லாவுயிர்க்கும்
பொதுவில் வைத்தாய் இறைவா..!
ஏனோ
மனிதர் ஏற்றமென்றும் தாழ்வென்றும்
உயிர்களைப் பிரித்தார்?

மனக்கொதிப்பிற்குள்ளாகும் அவர்,

மாயையை விட்டு நீ விலகு
மனமே!
ஞானப் புரவியேறு!

எனக் கட்டளை இடுகிறார்.

அவரின் காதற் கவிதைகளோ புதுச்சுவை தருகின்றன. இசைகூட்டிப் பாடப்பாட இன்பம் பயப்பனவாய் இருக்கின்றன. வண்ணக் கனவுக் குவியல்களின் கீதமாக அதை அவர் இசைத்திருக்கிறார் போலும்.

சிலையைப் போல நானிருந்தேன்.
சிற்பி - நீ எனை
மறுபடி செதுக்க முயன்றாய்.

தமிழ்த் திரைப்படங்களின் தூரத்தே ஒலிக்கும் பாடல்களின் சுவையை நெருட வைக்கும் பண்பு கவிதைகளுக்குள் ஆங்காங்கே மறைந்திருக்கிறது.

தோற்காத காதற் கவிதை.

மண், மனிதன், மாவீரன், கடவுள், குழந்தை, அம்மா, காதல், பாடசாலை, சீரழிவுச் சினிமா, கணவன், வேலை, வெளிநாடு, தோல்வி, வெற்றி, விடுதலை, சீதனம், பகட்டு, பொய்மை, சூழல், கவிஞர்கள் வாழ்த்து, கடல் என நாம் வாழும் உலகத்தைச் சுழன்று தனக்கு வாய்த்த மொழியாற் பேசி, தன்னுணர்வுக் கவிதையாய், பாவாய், செய்யுளாய் சந்தங்களுடனும் இசையுடனும் கூட்டித்தந்த இந்நூலினை இருகரம் நீட்டிப் பெறுவோம்.

- தா.பாலகணேசன்

சிறப்புரை

வண்ணவரிகள்
எனக்குத் தெரிந்தவரை....
ஏதோ.... எனக்குத் தெரிந்தவரை.....

எனக்குத் தெரிந்த லினோதினியைப் பற்றியும், அவரது கவிதைகள் பற்றியும், ஏதோ எனக்குத் தெரிந்வரை இங்கு சொல்ல முயற்சிக்கின்றேன்!

வேலிகளற்ற மாந்தோப்பில் கைக்கெட்டிய தூரத்தில் தொங்கும் மாங்கனிகளைப் போல அட்டை வரையப்படாத கணனிக்குள் இருந்து எடுக்கப்பட்ட இந்த 'நெருங்கிய பொருள் கைப்பட வேண்டும்' என்னும் கவிதைத் தொகுப்பிற்காக வரையப்பட்டிருந்த ஐம்பதிற்கும் மேற்பட்ட கவிதைகளையும் என் கைகளில் திணித்து, 'இக் கவிதைகள் பற்றிய உங்கள் கருத்துரைகளைத் தாருங்கள்' என்றார் கவிதாயினி திருமதி. லினோதினி சண்முகநாதன் அவர்கள். நானும் ஏதோ எனக்குத் தெரிந்தவரை இங்கு கருத்துரைக்க முயற்சிக்கின்றேன். இங்கு நான் சொல்வதெல்லாம் மிகை முலாம் பூசாத நிஜங்கள்.

இவரை எனக்கு எப்படித் தெரியும்? கவிதைகள் மூலமாகத் தான் தெரியும்! ஒரு தொலைக்காட்சித் தொடருக்காக கவிதைகள் மூலமாக சித்திரங்களைப் பேசவைக்க முயன்ற போது தான்

கலைஞர் தயாநிதி மூலமாக இவரது அறிமுகம் கிட்டியது. ஒரு வருடத்திற்கும் மேலாக ஒளிபரப்பப்பட்ட அந்த நிகழ்ச்சியில் அரைவாசிக்கு மேற்பட்ட நிகழ்ச்சியில் சகோதரி லினோதினி அவர்கள் பங்குபற்றி அந்த நிகழ்ச்சியின் வெற்றிக்கு உறுதுணையாக இருந்திருக்கின்றார்.

கவிதை என்பது வெறும் இலக்கியம் மட்டுமல்ல! அது காலத்தின் கண்ணாடியாகும். ஆக்கங்களையும் அழகுகளையும் மட்டுமல்ல, அழிவுகளையும், சிதைவுகளையும் மக்கள் மனங்களில் இலகுவாக பதியவைப்பதோடு பின்னர் ஏதோ ஒரு தாக்கத்தையும் ஏக்கத்தையும் ஏற்படுத்துவதே கவிதைகளின் வெற்றியாகும்! இந்தக் கவிதைத் தொகுதியின் மூலமாக வெற்றிப் படிகளில் காலடி எடுத்து வைத்திருக்கின்றார் லினோதினி அவர்கள்.

சொற்கள் நடந்தால் அது வசனம்! நடனமாடினால் அது கவிதை!! லினோதினி அவர்கள் எழுதும் சொற்கள் ஒவ்வொன்றும் நடனமாடிக் கொண்டே ஊர்வலம் செல்கின்றன. அன்று தொலைக்காட்சியில் சித்திரங்களுக்காக இவர் வாசித்த கவிதைகளில் சிலவும் இந்தப் புத்தகத்தில் இடம்பெற்றிருக்கின்றன. இப்பொழுது புகழ்பெற்ற பெரிய கவிஞர்களின் தொகுப்புகளே அது கவிதைத் தொகுதியா? புகைப்படத் தொகுதியா? எனக் கணிக்க முடியாதவாறு நாலு வரிக் கவிதைகளுக்கு ஒரு பக்கம் முழுவதும் படமாகவே இருக்கும்! ஆனால் சித்திரங்கள் இல்லாமலேயே இங்கு பதியப்பட்டிருக்கும் ஏனைய கவிதைகளைப் படிக்கும்போது எனது மனக்கண்களில் அக் கவிதைகளுக்கான சித்திரங்கள் வந்து வந்து மறைகின்றன! அவ்வளவு அற்புதமான

வார்த்தை ஜாலங்கள் இவருடைய கவிதை வரிகளுக்குள் அடங்கியிருக்கின்றன!.

காலத்திற்கும், நேரத்திற்குமாகக் காத்திருக்காமல் தாயின் கருப்பைக்குள் இருந்து தானாகவே உதைத்துக்கொண்டு வெளிவருகின்ற குழந்தைகளைப்போல கவிதைகளில் இவர் தொடுக்கின்ற வார்த்தைகள் ஒவ்வொன்றிலும் சூழ்நிலைகளுக்கேற்ப காதல், பாசம், சோகம், குறும்பு, வீரம், என அனைத்தும் உயிருள்ள உதாரணங்களாக உறைந்து கிடக்கின்றன! மை வேலை தெரிந்த மந்திரக்காரர்களின் வித்தைகளைப் போல இவருடைய இந்ததக் கவிதைத் தொகுதிக்குள் அடங்கியிருக்கும் கவிதைகள் அனைத்தும் கன்னிப் பெண்களின் இடைகளைப் போல் கச்சிதமாகவும் இருக்கின்றது! வாலிப வேங்கைகளின் தோள்களைப் போல வைரம் பாய்ந்தும் இருக்கின்றது!.

பேசுவதாக இருந்தாலும் சரி, எழுதுவதாக இருந்தாலும் சரி, அதற்கு ஒரு அளவுகோலை வைத்திருக்கும் இவரது பாணி இவரின் வெற்றிகளுக்கு நன்றாகவே கைகொடுக்கின்றது. எதைப் பேசினாலும் எதை எழுதினாலும் அது சிறப்பாக இருக்கவேண்டும் என்பதற்காகக் கடினமாக, ஊக்கமாக, அறிவுபூர்வமாக உழைக்கும் லினோதினி அவர்கள் ஒரு சிற்பி சிற்பங்களைச் செதுக்குவது போல இந்தத் தொகுதியில் உள்ள கவிதைகள் அனைத்தையும் செதுக்கிச் செதுக்கி கவிதைகளில் நாட்டமில்லாதவர்களைக் கூட அதை ரசிக்கவைக்கும் படியாக இத் தொகுப்பை ஒரு கவிதைச் சிற்பமாக்கியிருக்கின்றார்!.

சிற்பம் செதுக்குவதற்கு நுணுக்கம் வேண்டும்!
ஓவியம் வரைவதற்கு கவனம் வேண்டும்!
கவிதை எழுதுவதற்குக் கற்பனைத் திறனோடு பொறுப்பும், பொறுமையும் வேண்டும்!

பொறுப்பும் பொறுமையும் சகோதரி லினோதினி அவர்களிடம் மிக அதிகமாக இருப்பதை இத் தொகுப்பில் உள்ள கவிதைகளைப் படிக்கும்போது நீங்களே தெரிந்துகொள்வீர்கள்.

வெளிநாடுகளில் ஆயுத உதவி பெற்ற ராணுவம் வீண் ஜம்பம் காட்டுவது போல் இல்லாது, இவரால் சொல்லப்படுகின்ற பொருள், சொல்லுகின்ற விதம், இவற்றில் எல்லாம் புதிய நோக்கு புதைந்து கிடக்கின்றது!

இப்பொழுது இவரது பேனா நடந்துபோன பாதைகளின் பின்னே நானும் நடந்து சென்று ஏதோ எனக்குத் தெரிந்தவைரை சொல்ல முயற்சிக்கின்றேன்.

கடவுள் வாழ்த்துக் கவிதைகளிலும் சரி, தமிழ்த்தாய் வணக்கத்திலும் சரி, தன்னிடம் எதுவுமே இல்லை, எல்லாம் உம் அருளே! எனக்கூறும் பணிவான வார்த்தைகள் ஏனைய அனைத்துக் கவிதைகளிலும் மறைந்திருப்பதை ரசிக்க முடிகின்றது.

இந்த மறைமுகக் கருத்துகளை எடுத்துக்காட்ட 'சுதந்திரம்' என்னும் கவிதையில் வரும் சில வரிகளைப் பார்க்கலாம்

கதிரவன் தனது கதிர்களைப் பரப்ப
இருண்ட உலகம் ஒளியினை வாங்கும்!
உயர்ந்த பனைமர உச்சியினின்று
சிறகுகள் அடித்துப் பறவைகள் பாடும்!

முதல் இரண்டு வரிகளில் 'இருண்ட உலகம் ஒளியினை வாங்கும்' எனப் பொதுவாகச் சொல்லிவிட்டு, அடுத்து வரும் 'உயர்ந்த பனைமர உச்சியினின்று சிறகுகள் அடித்துப் பறவைகள் பாடும்' என்னும் வரிகளில் தமிழர்களின் தேசியத்தைப் பறைசாற்றிக் கொண்டிருக்கும் பனைமரத்தை நாசூக்காகப் புகுத்தி தமிழ் மக்களும் அந்தச் சுதந்திரத்தில் அக மகிழ்வார்கள் என்பதை 'சிறகுகள் அடித்துப் பறவைகள் பாடும்' என்பன போன்ற வார்த்தை அலங்காரங்கள் அனைத்துக் கவிதைகளிலும் தெரிகின்றது.

மாவீரர் வணக்கத்துரிய கவிதையில்

துணை விட்டு, மனை விட்டு
வினை காக்க விரைந்தோடி
உயிர் தந்த மாவீரர்காள்! உமக்
கிணையென்று எவருண்டு?

இந்த வார்த்தைகளுக்கு மத்தியில் ஒரு வலிமையான வீரன் கிடந்து புரள்வதை புரிந்து கொள்பவர்களே புத்திசாலிகள்!

கவிஞர்கள் வெறும் கற்பனைகளோடு வாழ்பவர்களல்ல! கவலைகளையும், கண்ணீரையும் தங்களுக்குள்ளேயே புதைத்து வைத்துக்கொண்டு சந்தர்ப்பம் கிடைக்கும்போது அதைக் கவிதையாகக் கொட்டிவிடுவார்கள் என்பதற்கு உதாரணமாக ஒரு

கவிதையைப் பார்ப்போம். இது புலம் பெயர்ந்த பின்னர் சந்தர்ப்ப வசத்தால் பெற்றவர்களை அவர்களின் மரணத்திற் கூட பார்க்க முடியாதவர்கள் பலர் இருக்கின்றார்கள்! இங்கு தானே அந்தப் பாத்திரமாக மாறி அம்மா என்னும் கவிதையில்

உன் இதமான இதயத்தை
இறுக்க மிதித்துவிட்டுக்
கனமான கவலையொன்றை
உன் மனதினிலே தேங்கவிட்டேன்

சுகமான வாழ்வொன்றை
இதமாக நான்தேடிப்
பதராக உன்னையங்கு
பரிதவிக்க விட்டேன்!

பிரிவில் தனது வேதனையை மட்டுமல்ல! பெற்ற தாயின் வேதனையையும் தனது கவிதை மூலமாக இங்கு சொல்லி யிருக்கின்றார். இப்படியான வரிகள்தான் கவிதைகளின் கருத்திற்கு உயிரூட்டுகின்ற வரிகள்!

கல்லுடைக்கும் தொழிலில் சிறுவர்கள் ஈடுபடும் காட்சிக்காக ஒரு கவிதை எழுதியிருக்கின்றார். இது தொலைக்காட்சித் தொடருக்காக சித்திரங்களைப் பேசவைப்பதற்காக எழுதிய கவிதை என நினைக்கின்றேன். இதற்கான கவிதையில் அந்தச் சிறுவர்களின் அவலத்தைத் தான் மட்டும் தனியாகச் சொன்னால் போதாது. கவிஞர்களே நீங்களும் வாருங்கள், எல்லோரும் சேர்ந்து உரக்கச் சொன்னால்ததான் உலகத்திற்குக் கேட்கும் என்பதைப்போல

என்னினிய பாவலர்களே ஏடெடுப்பீர்!
எழுதுகோலால்
இறுகிய இதயங்களின்
இறுக்கங்கள் உடைப்பீர்! - இக்
கண்மணிகள் வாழ்வதற்கு
கவியிலொரு மனுக் கொடுப்பீர்!

எப்படி இவர் இப்படியெல்லாம் சிந்திக்கின்றார்? என வியக்க வைத்திருக்கின்றார்! இதே போல சிறு வயதில் குடும்பச் சுமையிலும், வறுமையிலும் துடிக்கும் சிறுவர்களைப்பற்றி இன்னும் சில கவிதைகள் பின்னால் வருகின்றன.

புத்தர் பிறக்கும் போது விரல்களை மூடிக்கொண்டே பிறந்தாராம்! ஏன் தெரியுமா? கரங்களை அசைத்தால் காற்றுக்கே காயம் உண்டாகி விடுமோ என்பதற்காகவாம்!

அவர் அங்கியை இடுப்பிற் கட்டாமல் போர்த்திக் கொண்டே நடந்தது கூட இடுப்பிலே கட்டினால் வயிற்றுக்கு வலிக்கும் என்பதனாலாம்!

அப்படிப்பட்ட புத்தர் அருளிய மதத்தின் புகுந்த வீடாகிய ஈழநாட்டில் எம் தமிழ் மக்கள் அடக்குமுறைகளுக்கு உட்படுத்தப் பட்டபோது அவர்களை எதிர்த்துச் சுதந்திரத்திற்காக போராடிய மங்கையர்களை அக்கினிப் பறவைகள் என்கின்றார்!

மாவைப் பிசைந்த கரங்களிலே
மலையைத் தகர்த்தும் துணிவு கொண்டு
சாவைக் கடந்தும் ஓடுகின்றாள்! என்

பாவிற் புகுந்து பண்ணிற் கலந்து
பைந்தமிழ் நங்கை பேசுகின்றாள்! - என்
பாவில் வீரம் பூசுகின்றாள்!

குப்பைகளை எரித்துச் சாம்பலாக்கும் போதும் தனது புனிதத்தை இழக்காத நெருப்பினைப் போல அந்த வீர மகள்களைப் பற்றி எழுதும்போது தனது பாவிற்கு வீரம் வருகின்றது எனப் பெருமையாகச் சொல்கின்றார். ஆமையும் முயலும் கதைக்கு ஒரு புதுமையான விளக்கம் கொடுக்கின்றார்!.

இப்படி இப்படியாக பெண் விடுதலை பற்றி, நாகரிக நங்கைகள் பற்றி, வீரப் பெண்கள் பற்றியெனப் பெண்களைப் பல கோணங்களில் பாடியிருக்கின்றார். அதே போலக் காதலையும் பல கோணங்களிப் பார்த்திருக்கின்றார்

விரிந்த இதயத்தோடும், குமுறிவரும் கோபங்களோடும், மலர்ந்து வரும் சந்தோசங்களோடும் உருவாகியிருக்கும் இந்தக் கவிதைத் தொகுப்பில் உள்ள கவிதைகள் அனைத்தும் வாசகர்களின் உரத்த சிந்தனைக்கு வித்திடும் என்பதில் எனக்கு எள்ளளவும் ஐயமில்லை.

சகோதரி லினோதினி அவர்கள் கடலில் மூழ்கி முத்தெடுப் பதைப்போல இந்தக் கவித் தொகுப்பினைத் தந்திருக்கின்றார். லினோதினி எனக்குத் தெரிந்தவர் என்பதனால் அல்லாமல் கவிதைகளைப் பற்றி ஏதோ எனக்குக் கொஞ்சம் தெரியும்

என்பதனாலேயே இவருடைய கவிதைகளுக்கு இங்கு கருத்துரைத் திருக்கின்றேன்.

மீண்டும் நான் சொல்கின்றேன் இங்கு நான் சொல்லியவை அனைத்தும் மிகை முலாம் பூசப்படாத நிஜங்களே.

இலக்கிய உறவுகளுடன்

'கலைஞர் காவலர்' 'மனிதருள்'

வண்ணை தெய்வம்



வாழ்த்துரை

உள்ளத்தில் கிளர்ந்தெழும் உணர்வுகளை இயல்பாகப் பதிவு செய்யும் கலைதானே கவிதை. இக்கருத்தையே, ஆங்கிலத் திறனாய்வாளர்களும், 'poetry is the spontaneous overflow of powerful feelings collected in tranquility' என்பர். இப்படி எழுதுபவருக்கு மட்டுமல்லாமல் கேட்பவருக்கும் படிப்பவருக்கும் கூட ஏதாவது ஒரு தாக்கத்தை ஏற்படுத்துவதே நல்ல படைப்புக்கு அடையாளமாகும். கவிதைக்கும் இது பொருந்தும். புதுக்கவிதை வடிவில் பலப்பல தலைப்புகளில் கவிதை விருந்தளிக்கும் கவிதாயினி திருமதி. லினோதினி சண்முகநாதன் அவர்களின் கவிதைகள் உணர்ச்சி மிகுந்த தாக்கத்தை நமக்குள் ஏற்படுத்துகின்றன. ஏனெனில், அவருடைய வார்த்தைகளில் சொல்வதென்றால், இன்பமோ துன்பமோ எதையும் மனதால் உணர்ந்து எழுதவேண்டும் என்ற அவருடைய கருத்துப்படியே தம் மனத்தால் உணர்ந்தவற்றையே தம் கவிதைகளில் வெளிப்படுத்தி இருக்கிறார் அவர்.

ஆழ்ந்த சிந்தனைகளைத் தெளிவான நீரோட்டம் போல தங்கு தடையின்றி மடை திறந்த வெள்ளம்போல் கவிதைகள் படைக்கும் ஆற்றல் படைத்த இவர், தாமாகத் தேர்ந்தெடுத்த தலைப்புகளில் கவிதைகளை எழுதுவதோடு கவியரங்கங்களில் பங்கேற்றுத் தமக்குக் கொடுக்கப்பட்ட தலைப்பைவிட்டுச் சிறிதும்

பிறழாமல் தம் கருத்துகளைக் கொஞ்சும் தமிழில் நயம்பட கவிதையாகப் படைக்கும் படைப்பாளியாகவும் ஒளிருகிறார்.

இவர் பெண் என்பதால் அதன் தாக்கம் அவர் கவிதைகளில் பல இடங்களில் வெளிப்படுகிறது. எடுத்துக்காட்டாக, **பொன் விலங்கு** என்ற கவிதையில்

'குனிந்த உன் தலையை நிமிர்த்து!
துணிந்து பொன் விலங்கு தகர்த்து!
குவலயம் காண விழித்து - வெற்றி
எட்டுவாய் கால்கள் பதித்து!'

என்று அறைகூவல் விடுத்து விலங்கை உடைத்து வெளியே வருமாறு அழைப்பு விடுக்கிறார். இதனைப் படிக்கின்ற பெண்ணுக்கு விலங்கை உடைத்து வெளியே வரவேண்டும் என்ற துடிப்பு வரத்தானே செய்யும்.

இன்னொரு கவிதையில்,

'. . . . . .
பச்சையாய்ப் பெண்ணைக்
கொச்சைப் படுத்தும்
நோக்கினையுடைய பாடல்களும்,
இச்சையைத் தூண்டி இள வயதினரை
ஈர்க்கும் காட்சி அமைப்புகளும்,
மொத்தமாய் அமைந்த திரைப்படங்கள்
குப்பையெனவே ஏராளம்!'

எனப் பெண்களை விற்பனைப் பொருளாக்கும் இன்றைய

சில திரைப்படங்கள் பற்றிய தமது கருத்தை அழுத்தம் திருத்தமாகக் கூறுகிறார்.

'பெண்ணே!
விண்ணுலகம் வியக்கும் வகை
நீ விந்தைகள் புரிந்தாலும்,
மண்ணுலக ஆண்களெல்லாம் - உன்னை
அன்னையென்று போற்றும் வண்ணம்
அடக்கமான உடையணிவாய்!

அடக்கமும், பண்புமே - உன்னை
அன்னையென அறிவிக்கும்!'

என்று 'நாகரிக நங்கை'க்கு எச்சரிக்கை விடுக்கிறார்.

'இரும்பாலையில் அடிபட்ட
இரும்பே மணியாகி,
இறைவனின் புகழைப் பாடும்!
துன்பத்தில் வதைபட்ட
மனமே இறைவனின்
திருவடியிற் சோகம் ஆறும்!'

என்று வாழ்வியல் தத்துவத்தை இக்கவிதை காட்டுகிறது.

மேலும், தாய் நாட்டைப் பற்றிய ஏக்கம் அவர் கவிதைகளில் பிரதிபலிக்கிறது. தாய் மண்ணை மறவாது நெஞ்சுருக எழுதுபவர் இவர்.

காதில் கேட்டவை காற்றோடு போய்விடாமல் பலமுறை அவற்றைப் படித்து நெஞ்சில் பதிய வைத்துக் கொள்ள தம்முடைய 55 கவிதைகளைத் தொகுத்து நூல் வடிவம் கொடுத்து வெளிக் கொணர்ந்துள்ளார். இந்நூல் அவருடைய முதல் குழந்தை. இதற்கு எனது பாராட்டுகளும் வாழ்த்துகளும். இதனை வாங்கிப் படித்துப் பயன் பெறுவோம்.

இதுபோல பல குழந்தைகளைப் பெற்றெடுத்து நாட்டுக்கும் வீட்டுக்கும் சமூகத்துக்கும் பணிபுரிய எல்லாம் வல்ல இறை அருள் என்றும் அவருக்குத் துணைபுரிந்திட வேண்டுமென்று இறைஞ்சு கின்றேன். வாழ்க கவிதாயினி! வளர்க அவர் கவிதைக் கலை!

அன்புடன் தோழி

ஷாசியா லெபோ



வாழ்த்துரை

என் கைகளிற் தவழும் இந்நூல் மதிப்பிற்குரிய சகோதரி லினோதினி சண்முகநாதன் அவர்களின் மனோவண்ணம் என்பது மகிழ்வானது. பெருமைக்குரியது. அவரை ஒரு பத்து வருடங்களுக்கு முன் அவரது கணவரின் இசைக்குழுவில் பாடும்போது பார்த்தேன். பின்பு ரி.ரி.என் இல் குழந்தைகள் நிகழ்ச்சியினைத் தயாரித்து, வழங்கும் பொறுப்பினை வரித்துக் கொண்டார். குழந்தைகளோடு இன்னொரு குழந்தையாக, தாயாக, ஆசிரியையாக, மாமியாக, நண்பியாகத் தன் பொறுப்பினைச் சுமந்த அழகு அவரிடம் மேலும் மறைந்து, உறைந்திருந்த வல்லமைகளை மக்கள் முன்றலில் சேர்த்தது.

இன்னும், அதே தொலைக்காட்சி சேவையில் திரு. வண்ணை தெய்வம் அவர்களுடைய 'சித்திரம் பேசுதடி' கவிதா நிகழ்ச்சியில் அவர் பாடிய கவிதைகள் பல உண்டு. அந்த நிகழ்ச்சியானது அதன் உபாய அடிப்படையிலேயே மிகமிகச் சிறந்தது.

சிறந்த முறையில் பதிவு செய்யப்பட்ட ஒரு புகைப்படம் ஆயிரம் சொற்கள் தரும் செய்தியை விட அதிகமான செய்திகளை வழங்குமென்று சொல்வார்கள். அவ்வாறான ஒரு படம் எமது மண்ணிலிருந்து பெறப்பட்டதாக இருக்கும் போது இன்னும் எவ்வளவு செய்திகளைத் தாங்கியதாக இருக்கும். அப்படியான ஒரு படத்தை கவிஞர் வண்ணை தெய்வம் தெரிவு செய்து நான்கு கவிஞர்களிடம்

தருவார். அவர்கள் அதனை, அவரவர் பார்வைகளுக்கு ஏற்றவாறு, வெளிப்படையாகப் புலப்படும் அதன் செய்தியிலிருந்து மறைபொருட்கள் வரைக்கும் அலசி, ஆராய்ந்து அழகான கவிதைகளில் வடித்து, எமது மக்கள் முன் படிக்க வேண்டும். இத்தொடர் நிகழ்ச்சி லீனா ஜெயக்குமார், அமரர் சிவலிங்கம் சிவபாலன், அமரர் பவன், ரமேஸ் சிவரூபன், தமிழ்ப்பிரியா, துஷியந்தி, சுதர்சன் உட்பட இன்னும் பல கவிஞர்களின் கருத்துகளை மக்களிடம் கொண்டு சென்றிருக்கிறது. இதில் ஒருவராக லினோதினியும் இணைந்து எடுப்பான கவிதைகள் பாடியதை அந்நிகழ்ச்சியின் பார்வையாளர்கள் மறந்திருக்கமாட்டார்கள்.

மேலும், அவருடைய இலக்கியத் தளம் பட்டிமன்றங்கள், மேடைப் பேச்சுகள் என விரிந்தே செல்கிறது. அவர் ஒரு சிறந்த நிகழ்ச்சி அறவிப்பாளரும் கூட. இவர், இவ்வாறான ஒரு வாழ்வோட்டத்திற்கு இயைந்தோடித் தெம்பூட்டும் ஒரு உன்னதமான ஓர் இசைக்கலைஞரைக் கணவராக அடையப் பெற்றவர்.

இப்படியான பின்னணியில் வளர்ந்துவரும் லினோதினி ஒரு சிறந்த கவிதாயினி என்று அடையாளப்படும் வகையில் இக்கவிதை நூலினைத் தமிழ் பேசும் நல்லுலகிற்கு வழங்கியிருக்கிறார். இவரது கவிதை ஆலையில் எமது நெஞ்சம் உருக்கப்பட்டு, அழுக்குகள் வடிக்கப்பட்டு பதினிடப்படுகின்றது.

கார் மேகம் பொழிந்து - உம்
கல்லறை கழுவ,
கண்கள் நீர் சொரிந்து - உம்
கழல் கழுவ...

என்கிற மனதைப் பிழியும் 'மாவீரர் வணக்க'ப் பாடல் வரிகள் எமக்கு மிகத்தாக்கமான உணர்வதிர்ச்சியினை ஏற்படுத்துகின்றன. பின்பு, மிகப்பொருத்தமாக, 'சுதந்திர'த்திற்கான பாடலில் வரும்,

கண்ணின்று வழியும் விழி நீரை
விரல்கள் விரைவாய்த் துடைத்தெறியும்!

என்கிற வரிகள் எமக்கு அத்துன்பத்திற்கான அருமருந்தாக மாறி, புத்தம்புதிய சக்தியோடு இந்நிலவுலகிலே உன்னதமாக வாழுமாறு வாழ்த்திச் செல்லுகின்றன. இந்நூலிலே, ஒரு நூலாக இழையோடும் இந்த வித்தை, அதன் வேறுபட்ட பகுதிகளெல்லா வற்றையும் இணைத்து ஒரு சிறுகதை போல் ஆக்கிவிடும் சிறப்பை என்னென்பேன்!

இவ்வாறு, தமிழ்த்தாயையும், தமிழ்பேசும் மக்கள் மட்டுமல்ல மானுடமே மறக்கக்கூடாத எமது மாவீரர்களையும், தனது இதயத்தால் வருடி, வணங்கிப் புறப்படும் அவரது கவிதைப் பயணம், மனித வாழ்வியலின் பிரதான கூறுகளையெல்லாம் உழவனின் கைப்பட்ட கலப்பைபோல் உழுது செல்கிறது. ஒரு பொறுப்புள்ள தமிழ்ப்பெண்ணாக, 'பொன்விலங்கு' தலைப்பிலான பாடலில்,

முக்காடிட்ட முகத்திரை கிழித்துப் - பெண்கள்
திக்கெட்டிலும் வெற்றியெட்டுகின்றார்!
பக்கத்து வீடு தெரியாத பெண்ணும்
பார் சுற்றி வர, - உலகப்
படத்தினில் ஏதோ தேடுகின்றாள்!

என்று பாடும் வரிகளும், படிமங்களும் எவ்வளவு நுட்பமாக மனதைத் தாக்குகின்றன.

இவ்வாறு எல்லாத் திக்கிலும் எத்தனை எத்தனையோ வரிகள்! அத்தனையும் வாழ்க்கைப் பட்டறையிற் பட்டறிவுகள் இந்நூலெங்கும் விரவிக் கிடக்கின்றன! பல இடங்களில் கையில் தடி இல்லாத, அன்புத் தாயாக நின்று செய்யும் கண்டிப்புகள் தமிழுலகமே அலட்சியம் செய்யக்கூடாதன.

இந்நூலில் முக்கியமானவை, அழகானவை என்று தனித்தனியாக எழுதி, குறிப்பெடுத்து, பின் அவற்றின் அடிப்படையில் இவ்விடயத்தினை எழுதலாமென்று ஆரம்பத்தில் முயற்சித்தேன் - என்னுடைய வசதிக்காக. கொஞ்சம் தனித்தனியாக எழுதி வைத்தும் பார்த்தேன். அட..! நூலையே திருப்பி எழுதவேண்டுமோ என்கிறவாறு இருந்தது. இன்னொரு 'ஆய்வுரை' வந்துவிடுமோ என்ற தயக்கம்.

இந்த அன்புக்குரிய என் தங்கையை, தாயை, குழந்தையை மனதார வாழ்த்த வேண்டும் என்ற ஒரே அவாதான் எனக்கு. இந்த அண்டமெல்லாம் வியாபித்து விளங்கும் அன்பின் பெயரால், இவர் இன்னும் பல்லாண்டு இப்புவியில் வாழ்வாங்கு வாழ்ந்து, எத்தனையானாலும் அத்தனையும் கவியில் புனைந்து, தமிழுக்கு மழையென நல்க வேண்டுமென்று வேண்டி, மனதார வாழ்த்துகிறேன்.

நன்றி.

கு.பரராசா

என்னுரை

***அ**ருளே, இறையே! - உனைப்*
பாடாத வாயென்ன வாயோ?
அறிவே, தமிழே! - உனைப்
போற்றாத கவியென்ன கவியோ?
அகத்துள் ஒளிரும் தமிழ்க்
குலத்தின் சுடரே! - உமை
வணங்காதென் இதயம்
இருந்தென்ன பயனோ...?

யாழ் குடா நாட்டிலே ஆலயம் ஏழமைந்த அழகிய கிராமம் ஏழாலை. இங்கே தான் நான் பிறந்தேன்.

எனது தாயார் ஓர் ஆசிரியையாக இருந்த காரணத்தினால், ஒரு பெண் தன் வாழ்க்கைக்கும், அறிவிற்கும் எவற்றையெல்லாம் அடிப்படையாகக் கற்றுக் கொள்ள வேண்டுமோ, அவற்றையெல்லாம் எனக்கு ஒழுங்காகவும், முறையாகவும் கற்றுக் கொடுத்தார்.

பாடசாலை நேரங்கள் தவிர, மீதி நேரங்களில் ஓய்வே இல்லையெனும் அளவிற்குத் தேவாலயப் பணிகளைச் செய்வதிலும், ஏனைய கலைகளைக் கற்பதிலும் எனக்கு ஆர்வத்தை ஏற்படுத்தி, ஊக்குவித்தார்.

இதுவே பின்னாளில் என்னுடைய வளர்ச்சிகளுக்கெல்லாம் வித்திட்டது என்பதில் என்னைப் படைத்த ஆண்டவனுக்கும்,

நான் பிறந்த மண்ணுக்கும், எனது தாயாருக்கும், அண்ணனுக்கும் என்னுள்ளத்தின் ஆழத்திலிருந்து நன்றிகளை உரித்தாக்கி, என் கவிதைப் பயணத்திற்காய்ப் புறப்படுகின்றேன்.

என்ன தான் ஒரு பெண் படித்திருந்தாலும், ஆற்றல்கள் அனைத்தும் பெற்றிருந்தாலும், திருமணத்திற்குப் பின் அவளது சுதந்திரமென்பது அவள் கணவன் கையிற் தங்கியிருக்கின்றது. இந்த வகையிலே, எவ்விதத் தடைகளுமின்றிக் கவிதைத் துறையில் நான் முழுமையாக ஈடுபட எனக்கு நல் ஊக்கம் கொடுக்கும் எனது கணவரையும் இவ் வேளையில் என் மனம் நன்றியோடு நினைத்துக் கொள்கிறது.

எந்தவொரு படைப்பாளியும் தன்னைச் சூழவுள்ள சமூகத்தில் தான் பார்த்த, கேட்ட, உணர்ந்த, தன்னைப் பாதித்த விடயங் களிலிருந்து தனது படைப்புகளை வெளிக் கொணர முயற்சி செய்கின்றான். இந்த வகையிலே, எனக்குட் தாக்கங்களை ஏற்படுத்திய பல்வேறுபட்ட விடயங்களிலிருந்து நான் மகிழ்வுடனும், வலிகளுடனும், ஆதங்கத்துடனும், அக்கறையுடனும், எதிர்பார்ப்பு களுடனும் பிரசவித்த கவிதைகளை நெருங்கிய பொருள் கைப்பட வேண்டும் எனும் கவிதைத் தொகுப்பினை நூலாக உங்கள் கைகளிற் தவழ விடுவதிற் பெரு மகிழ்வடைகின்றேன்.

எந்த வாழ்க்கை நிலையிலும் சரி, நினைத்ததை அடைந்து விடுவதென்பது சிலருக்கு எளிதாகவும், பலருக்குச் சவாலாகவும் அமைந்து விடுகிறது. தான் விரும்பியதை அடைய முடியவில்லையே என்கிற ஏக்கம் ஒரு மனிதனை வாழ் நாள் முழுவதும் நிம்மதியற்ற மனிதனாக்குகின்றது. முதலில் மனிதன் தனக்கு நெருங்கியதைத் தன் கைகளுக்குட் கொண்டு வர முயற்சிக்க வேண்டும். அது காதல், குடும்பம், சமூகம், அரசியல், ஆன்மீகம் என எதுவாக வேண்டுமானாலும் இருக்கட்டுமே!

மனத்திலுறுதியும், வாக்கினிலே இனிமையும், நினைவு நல்லதும் இருந்தால், நெருங்கிய பொருள் விரைவிற் கைவசமாகும்.

அக்கினிக் குஞ்சைப் பொந்திடை வைத்த என் கவி பாரதி வழியில், இந் நூலுக்கு **நெருங்கிய பொருள் கைப்பட வேண்டும்** எனும் பெயர் சூட்டினேன்.

என் கவிதா உலகின் நுழை வாயிலில் வாசகர்களுக்கு என் கவிதைகள் பற்றி...

உணர்வுகளின் பிரதிபலிப்புத் தான் கவிதை. ஆனால் அது என்னுடைய உணர்வுகளின் பிரதிபலிப்பாக இருக்க வேண்டுமென்கிற அவசியமில்லை. அடுத்தவர்களுடைய உணர்வுகளைத் தனதாக உள்வாங்கிக் கொள்ளுகின்ற ஒரு படைப்பாளி, தன்னையுமறியாமல் தானே அந்தப் பாத்திரமாக மாறி விடுகிறான். இங்கே பொழிந்திருக்கும் அனேகக் கவிதைகளில் இத்தகைதொரு தன்மை இழையோடிச் செல்வதை வாசகர்கள் உணர்ந்து கொள்ளலாம்.

தன் குழந்தையின் அழு குரல் கேட்டு இயல்பாகச் சுரக்கும் தாயின் முலையைப் போல, சமூக வாழ்வின் எல்லாத் தளங்களிலும்

எனக்குட் பீறிட்டுப் பெருகிய கவிதைகள் வாசகரோடு என்னை நெருக்கமாக்கும் என்றே நம்புகிறேன்.

குறிப்பிட்ட ஒருசிலரை மட்டும் திருப்திப் படுத்துவது என் நோக்கமல்ல! பாடுபொருள் ஒன்றாக இருப்பினும், அது வெவ்வேறுபட்ட வாசகரின் வெவ்வேறுபட்ட அனுபவங்களினூடாகப் பார்க்கப் படலாம்.

உதாரணமாக இத் தொகுதியில் வரும் காதல் எனும் தலைப்பின் கீழ்ப் பாடிய கவிதைகள் காதலின் இன்பம், துன்பம், இழப்பு, பிரிவு, ஏமாற்றம் என விரிந்து செல்லும் பக்கங்களாக உள்ளன.

அன்பின் நிமித்தம் நான் அனேகக் கவிதைகளில் மண்டியிடுகிறேன் எனும் விமர்சனங்கள் என் கவிதைகளுக்கு எழுந்ததுண்டு.

அதற்கான பதிலையும் இந் நூலிலே கூறிவிட ஆசைப் படுகிறேன். உலகிலே கடவுளும், காதலும், தாய்மையும், குழந்தையும் தெய்வீகமாகப் போற்றப் படுகின்றன! தெய்வீகமான எதற்கும் நான் மண்டியிடவே விரும்புகிறேன். அது என் இயல்பு. தன் இயல்பை விட்டு மீறுகின்ற எவனும் வாசகனிடமிருந்து அந்நியப்பட்டும், தன் தனித்தன்மையை இழந்தும், மறைந்தும் போகின்றான். அடித்துச் சொல்லப்படும் அறிவுரைகளைக் காட்டிலும், அணைத்துச் சொல்லப்படும் அறிவுரைகள் அதிக பலனைத் தருகின்றன!

இதற்கமையவே என் கவிதைகளும் அமைந்திருக்கின்றன. இந்த உணர்வுகளைப் புரிந்து கொண்டு, என் கவிதா உலகிற்குள் உங்களை அன்போடு வரவேற்கின்றேன்!

இந் நூலில் இடம்பெற்றுள்ள இருபத்தைந்திற்கும் மேற்பட்ட கவிதைகள் 2003 ஆம் ஆண்டு தொடக்கம் 2004 ஆம் ஆண்டு வரையிலான காலப் பகுதியில் ரி.ரி.என் தொலைக்காட்சியில் திரு. வண்ணை தெய்வம் அவர்களால் நடத்தப்பட்ட **சித்திரம் பேசுதடி** கவிதை நிகழ்ச்சிக்காக எழுதப் பட்டவையாகும்.

என் கவிதைப் பயணத்தில் ஒரு புதிய பாதையின் திறவுகோல் இச் **சித்திரம் பேசுதடி** நிகழ்ச்சி என்பதால், திரு. வண்ணை தெய்வம் அவர்களுக்கும், என்னை அவருக்கு அறிமுகம் செய்து வைத்த கலைஞர் திரு. தயாநிதி அவர்களுக்கும் என் உளமார்ந்த நன்றிகளைத் தெரிவித்துக் கொள்ளுகின்றேன்.

அந் நாளிலே ரி.ரி.என் தொலைக்காட்சியின் கலைப் பகுதிக்குப் பொறுப்பாக இருந்து, அதன் வளர்ச்சிக்காகத் தூக்கமின்றி இரவு பகலாக அயராதுழைத்த நல்லுள்ளம், நான் எப்போதும் அன்போடு பரா அண்ணன் என அழைக்கும் திரு. பரராசா அவர்களையும் இவ்வேளையில் என் மனம் நன்றியோடு நினைத்துக் கொள்ளுகின்றது. இவர் தான் முதன் முதலில் தொலைக்காட்சியில் **மழலைகள் பூங்கா** நிகழ்ச்சியினூடாக ரி.ரி.என் நேயர்களுக்கு என்னை அறிமுகம் செய்து வைத்தவர். இந் நூலிலே வாழ்த்துரையும் வழங்கியுள்ளார் என்பதில் எனக்கு மட்டற்ற மகிழ்ச்சியே!

என் வளர்ச்சிப் படிகளில் எனக்குதவிய, வாழ்த்துரைத்த ஒவ்வொரு நல்லுள்ளங்களையும், எனது பாடசாலை ஆசிரியர் களையும் நெஞ்சம் நன்றியொடு நினைக்க என்றுமே தவறியதில்லை.

ஒவ்வொரு வருடமும் கம்பன் விழாக் கவியரங்குகளுக்கு எனையழைத்துச் சிறப்பித்து, எனக்கு நற்றமிழ்ப் பாவலர் பட்டமும், பட்டயமும் வழங்கி என்னைக் கௌரவித்த பிரான்சு கம்பன் கழகத்

தலைவர் திருமிகு. பாரதிதாசன் அவர்களுக்கும், மற்றும் தாங்கள் நடத்தும்

ஒவ்வொரு கவியரங்குகளுக்கும் என்னை அழைத்துச் சிறப்பித்து, பட்டயம் வழங்கும் என் புதுச்சேரி அன்புள்ளங்கள், அனைத்துச் சங்கத் தலைவர்கள் முறையே,

திரு. பாரீஸ் பார்த்தசாரதி - பிரான்சு தமிழ்ச் சங்கம், திரு. பா.தசரதன் - பிரான்சு தமிழ்ச் சங்கம்

திரு. ஜெயராமன் - பிரான்சு முத்தமிழ்ச் சங்கம், திருமதி. சிமோன் இராஜேஸ்வரி - பிரான்சு கம்பன் கழகம் மகளிரணி

திரு. சிவப்பிரகாசம் - கண்ணதாசன் கழகம், திரு. முருகு பத்மநாபன் - எம்.ஜி.ஆர் பேரவை, பிரான்சு

திரு. அலன் ஆனந்தன் - உலகத் தமிழ்ப் பண்பாட்டுக் கழகம், திரு. அசோகன் - பிரான்சு தமிழ்ச் சங்கம்

திரு. முத்துக் குமரன் - சிவன் கோவில், பிரான்சு

ஆகியோருக்கும் என் மனமார்ந்த நன்றிகளைத் தெரிவித்துக் கொள்ளுகின்றேன்.

மேலும் இந்நூலுக்கு அணிந்துரை வழங்கிய பிரபல திரைப்பட இயக்குநரும், நடிகருமான திருமிகு. பாண்டியராஜன் அவர் களுக்கும், இந் நூலுக்கு முன்னுரை வாழங்கிய அன்பிற்குரிய கவிஞர் திருமிகு. தா. பாலகணேசன் அவர்களுக்கும்,

சிறப்புரை வழங்கிய திருமிகு. வண்ணை தெய்வம் அவர்களுக்கும், வாழ்த்துரை வழங்கிய திருமிகு. பரராசா,

திருமதி. லூசியா லெபோ ஆகியோருக்கும், அட்டைப் படத்தை அழகாக வரைந்து கொடுத்த என் மகன் நோக்கிக்கும்,

இந்நூலைனைப் பதிப்புச் செய்ய மணிமேகலைப் பிரசுரத்தாருடன் எல்லாத் தொடர்புகளையும் எனக்கு ஏற்படுத்திக் கொடுத்த திருமிகு. வண்ணை தெய்வம் அவர்களுக்கும் மீண்டுமொரு முறை நன்றி பாராட்டி மகிழ்கின்றேன்.

இந்நூலினை அழகுற அச்சிட்ட மணிமேகலைப் பிரசுத்தாருக்கும் என் உளமார்ந்த நன்றிகளைத் தெரிவித்துக் கொள்ளுகின்றேன்.

அன்புடன்,

லினோதினி சண்முகநாதன்
ஏழாலை கிழக்கு, ஏழாலை, தமிழீழம்.

தற்போதைய முகவரி
17 rue de Beziers
93150 Le blanc mesnil
France.



பகுதி - 1

கடவுள் வாழ்த்து

தமிழ் பாட அருள்வாய்

எல்லாமுமாகி எனக்குள் நிறைந்தவனே
வல்லோனே இறைவா!
எந்நாளும் நான் தமிழ் பாட,
எனக்கருள்வாய்!

■ ■

பரம்பொருள் தந்ததே!

எங்கெல்லாம் திரிந்து நான்
இறைவனைத் தேடினேன்,
அங்கெல்லாம் ஆண்டவன்
அருட்கரம் நீட்டினான்!

பொங்குமா தமிழில் நான்
புதுக்கவி தொடுத்திட
வந்து என்னுள்ளத்தே
தானமர்ந்தருள் செய்தான்!

அணைக்கவும், எடுக்கவும்
ஏங்கிடும் குழந்தை போல்
அழுது நான் துடிக்கையில்
அடைக்கலம் காட்டினான்!

துணைக்கு என் வாழ்விலே
தூயவன் இறைவனே
கடந்து என்னுட் சென்று
காவல் செய்தருள்கின்றான்!

அடைக்கலம் அண்ணலே,
ஆறுதல் அண்ணலே!
படைக்கும் என் பாவெல்லாம்
பரம்பொருள் தந்ததே!

■ ■

நல்லறிவீந்தாய்

நல்லறிவீந்தாய்,
சொல்வளம் பெருகச்
சுவையீந்தாய்!

பல் பொருளும் ஈந்தாய்!
பகுத்து உணரும்
அறிவுமீந்தாய்!

வல்லமை ஈந்தாய்!
பொல்லாதன விலக்கிப்
புகழீந்தாய்!

கல்லாவேனோ மனம்?
கடந்தென்னுள் இருப்பவனே
இறைவா!

■ ■

தமிழ்த் தாய் வாழ்த்து

ஆன்ற மொழிகளில்

ஆன்ற மொழிகளில்
அமுதெனும் தமிழே!
அம்மா என்றே
அழைத்தேன் உனையே!

மூன்று பொருளாய்
விளங்கும் தமிழே!
மூவேந்தர் போற்றிய
மொழியே! முதலே!

இயலிசை நாடகம்
எனுமோர் சிறப்பை
அயல் மொழி
அறியாதம்மா தமிழே!

வயல் வெளிகளிலும்
பாட்டாய்த் தவழ்ந்தாய்!
வரம்புகளின்றி
எங்கும் படர்ந்தாய்!

கரம் பிடித்தென்னைக்
கல்விச்சாலை
கடுகதியெனவே
விரைவாள் அன்னை!

பிரம்பெடுத்தாசான்
பிள்ளைத் தமிழே!
பிழைகளில்லாமல்
உனையெனக்களித்தான்!

உரமென என்னுள்
உனை விதைத்ததனால் - நான்
வளர்ந்தேன், செழித்தேன்
அறிவாய் தமிழே!

கரம் கொடுத்தென்னை
உயர்த்திய தாயே!
கருத்தினில் என்றும்
இனித்திடும் தேனே! - பாச்

சரம் தொடுத்திடவே
வல்லமை தந்து,
வரமென என்னுள்
நிறைந்தாயம்மா!

■ ■

தேன் தமிழே, தாய்த் தமிழே!

தத்தித் தத்தித் திரிந்தேன் தேன்தமிழே - எனைத்
தாவியெடுத்தணைத்தாய் தாய்த்தமிழே!
திக்குத் தெரியாதலைந்தேன் தேன்தமிழே - எனைத்
திசை காட்டியழைத்தாய் தாய்த்தமிழே!
என்னிற் கலந்தாய், என் நாவில் வந்தமர்ந்தாய்,
தாய்த் தமிழே வணக்கம்!
உன்னை என்னிற் கலந்து,
உலகம் எங்கும் தெளித்தேன்
தேன்தமிழே வணக்கம்!

■■

மாவீரர் வணக்கம்

கார்த்திகை 27

கார்த்திகை 27
நெஞ்சே!
எம் தேசப் பார்த்திபரை
உன் நினைவறையில்
தொழுவாய், பணிந்து!

தடையென்று எது வந்த
போதிலும் தகர்த்தெறிந்து - வீர
நடை போட்ட மாவீரர்காள்! - நீர்
விடை தந்து போனதை
விரும்பாத உள்ளத்தில் - கண்ணீர்
மடை திறந்த போது
இல்லைத் தாழ்ப்பாள்!

கொடையென்று நீர் தந்த
உயிர்கொண்டு தமிழன்னை
வாழ்கின்ற நிலை பாருமே! - அவள்
உடையென்று காக்கின்ற
மானத்தில், வீரத்தில்
தமிழ் வாழும், தமிழ் வாழுமே!

துணை விட்டு, மனை விட்டு
வினை காக்க விரைந்தோடி
உயிர் தந்த மாவீரர்காள்! - உமக்
கிணையென்று எவருண்டு?
அணையாமல் உள்ளத்தில்
ஒளிர்கின்ற மாவீரர்காள்!

வற்றாது கன்னத்தில்
வழிகின்ற கண்ணீரால்
வரைகின்ற கவிதையிது! - உம்
பொற்பாத மலர்களில்
சமர்ப்பணம் என்றும் நாம்
போற்றிடும் மாவீரர்காள்!

■■

கை தருவாரினி யாரோ?

கார் மேகம் பொழிந்து - உம்
கல்லறை கழுவ,
கண்கள் நீர் சொரிந்து - உம்
கழல் கழுவ,
கண்களே ஈரமாய்,
கவலையே பாரமாய்,
கை தருவாரினி யாரோ?
தென்றலே! - எம் தேசக்
கண்களே! - தேற்ற
எவர் வருவாரோ? - எமையினித்
தேற்ற எவர் வருவாரோ?

■ ■

சித்திரைப் புத்தாண்டுக் கவியரங்கக் கவிதை

இயற்கையைப் பாடுவோம் நிலவினைப் பாடுவோம்!

அன்னைத் தமிழை வளர்க்கின்ற
அறிஞர், கவிஞர் அவையினிலே,
விண்ணின் விளக்காய் இருக்கின்ற
வெண்ணிலவின் புகழைப் பாட எனை
அன்போடழைத்த பெரும் புலவீர்,
அவையீர் பணிந்தேன் தமிழ் வணக்கம்!

பெண்ணின் முகமாய் வெண்ணிலவைப்
பெருங் கவிஞர் எல்லாம் உரைத்ததனால்,
என்னைப் பாட அழைத்தனரோ?
ஏதுமறியேன் வெண்ணிலவே!

சின்னப் பெண்ணாய் இருக்கையிலே,
உன்னைக் காட்டி அழுதூட்டி
அன்னை என்னை அணைத்தனளே!
உன்னை நானும் மறப்பேனோ?
உயரே இருக்கும் என் நிலவே!

நான் உருவம் வளர்ந்து பெண்ணாகிப்
பருவம் அடைந்த பின்னாலே,
பண்பில் உயர்ந்த காதலர் என்
உள்ளம் அறிந்த பின்னாலே,
அன்பில் மலர்ந்த காதலுக்கு
உன்னைத் தானே தூது விட்டார்!
உணர்வாய் நீயும் என் நிலவே!

உள்ளம் இணைந்த காதலர்க்கு - நீ
உவகை பொங்கும் தேன் நிலவு!
வெல்லம் எனவே கவி படிக்க - நீ
விருந்தாய் அமைந்த வான் நிலவு!
கள்ளம் பிறந்து காதலிலே
கருத்துத் திரிந்த பின்னாலே,
சொல்லம்புகளாற் தாக்குகின்றார் - நின்னைச்
சூடாய் எரிக்கும் நிலவு என்று!

உள்ளம் பிரிந்தது காதலர்கள்!
கள்ளம் ஏது நீ புரிந்தாய்? - என்
கருத்தைக் கவர்ந்த பொன் நிலவே!
பாயும் ஒளியாய் வீசிய உனக்குத்
தேயும் நிலை வந்தெய்தியதேனோ?

பொய் சொல்லும் மனிதர் குணம் கண்டு,
கொல்லும் துன்ப உணர்வு கொண்டு,
செல்லும் உந்தன் நிலையதுவே
தேய் பிறையென்று ஆனதுவோ?

அல்லியுன்னைக் காணாது
அழகிய இதழ்கள் வாடியதால்,
உள்ளம் மகிழ்ந்த காதலர்கள் - உன்
வரவைக் காணாதேங்கியதால்,
முல்லை மலரும் முகம் நாணி
முற்றம் நோக்கி நின்றதனால்,
மெல்ல மெல்ல நீ முகம் காட்டும்
கோலம் தானது வளர் பிறையோ?

வாட்டம் கொண்ட காதலரின்
வருத்தம் போக்கும் துணைவன் நீ! - காதற்
தோட்டம் வீசும் தென்றலொடு
தூது செல்லும் தலைவன் நீ!
மனிதர் உன்னைக் காணாது, - மதியே, நின்
வதனம் மறைத்துக் கொள்வதனால்,
மன வலிகள் உனக்கும் வருவதுண்டோ? - இல்லை,
மாதம் தோறும் ஒரு தினம் நீ
மறைந்தே விண்ணில் இருப்பதனால்,
மங்கை விலக்கு உனக்குமுண்டோ?

கடல் தன்னிற் பிழைக்கும் மனிதருக்கு
வெள்ளி விளக்காய் எரியும் பொன்னிலவே!
மண்ணில் வாழும் ஏழைகளின்
கண்ணில் நீ தான் ஒளி விளக்கு!

எண்ணிலடங்கா ஏழைகள்
இருட்டில் வாழும் நிலையதனை
இன்னிலவே நீ அகற்றுகின்றாய்! - இமை
மூடாதென்றும் இருப்பதனால்!

துகிலாய் நீலப் பட்டாடை
உடுத்திச் சிரிக்கும் வெண்ணிலவே! - கார்
முகிலால் முகத்தை மூடுவதாற் - கடும்
நாணம் உனக்கும் வருவது பார்!

வெற்றியொடு தென்றல்
வீசிக் குலாவி வந்து,
பற்றினொடு மேனி
தொட்டுத் தழுவிச் செல்லப்,
பச்சை வயலெல்லாம்
பளபளத்துப் பூச் சொரிய,
சுற்றம் நான் மறந்து,
நற்றமிழைத் துணைக்கழைத்து,
ஒற்றை நிலவே! உனக்கோர்
வற்றாத கவி படித்து - என்
முற்றத்து நிழலில் நின்று - உன்னை
முகம்முகமாய் நோக்குவது,
எக்காலம் என் நிலவே?

பொற் காலம் மீண்டு வர - நீ
பொன்னொளி வீசி வர,
நற்றமிழிற் கவி தொடுத்து,
நான் பாடி வாழ்த்துகின்றேன்!

■ ■

சுனாமி கண்ணீர்க் கவிதை

கண்களே நம்ப மறுக்கின்ற காட்சியிது,
கலியுகக் காலத்தின் மிகப் பெரிய கொடுமையிது!
பிஞ்சோடு சருகுகளும் பிணமாகிக் கரையோடு,
நெஞ்சை வந்து நெரிக்கின்ற கொடிய சோகமிது!

அலை வந்து தொடுகின்ற
கரை மீது அமர்ந்து - சிறு
விரல் கொண்டு வரைந்த ஓவியத்தை,
விழி மூடா ரசித்த மழலைகளும்
விடியலைக் காணுமுன் மடிந்ததென்ன?

ஒன்றா, இரண்டா உயிர்கள்?
பல்லாயிரம் மக்களின் உடல்கள்!
கண்ணாயிருந்தோமே கடலாளே,
கருணையிழந்தாயுன் செயலாலே!

வீரம் செறிந்த மறவர்களை
மடியிற் சுமந்தது நீயன்றோ?
தீரமுடன் போராடுகையிற்
தாலாட்டியணைத்தவள் நீயன்றோ?
போரின் குணங்கள் ஏன் கொண்டாய்? - நீ
பொங்கி எழுந்து சீறியதாற்,
பாரின் மாந்தர் தவிக்கின்றார்!

ஒன்றா, இரண்டா உயிர்கள்?
பல்லாயிரம் மக்களின் உடல்கள்!
கண்ணாயிருந்தோமே கடலாளே,
கருணையிழந்தாயுன் செயலாலே!

கண்ணீரிற் கழிந்த வாழ்வதனைத்
தண்ணீரால் மூடி மறைத்தாயோ? - எம்
மண்ணிலே திரிந்த மனிதர்கள் - இன்று
மரத்துப் போன சடலங்கள்!

எங்கு பார்த்தாலும் பிணக் குவியல்கள்,
இயற்கைக்கும் இல்லையோ இரக்கங்கள்?
அங்கும், இங்கும் அலைக்கழிந்த மனதாய்,
அந்தரத்தில், அந்தரத்தில் எத்தனை உயிர்கள்?

கண்ணிரெண்டும் பார்த்திருக்கக்
கடல் கொண்டு போனதுவோ?
காப்பாற்ற நாதியின்றிக்

கைகள் முடமானதுவோ?
உயிர் பிரியும் ஓலம் கேட்டு,
உயிர் பிழியும் சோகமதை
உள்ளமது ஏற்றதுவோ?

தென்னை மர வட்டிடையே
மரணித்த மழலை - அருகில்
மார்போடு அணைத்து அதை
மடியிற் சுமந்த அன்னை!
என்ன இது, என்ன இது
இறைவா கொடுமை!
முன்னையொரு போதும் நாங்கள்
அறியா நிலமை!

இறைவா, இறைவா, இறைஞ்சுகிறோம்!
திறவாய், திறவாய் கண் திறவாய்!
நிறைவாய், நிறைவாய் உயிர் படைத்துப்
பரிவாய்க் காப்பது நீயன்றோ? - பெரும்
அளவாய் அழித்தலை ஏன் செய்தாய்?
துயராற் துடிக்கும் மனிதன் பார்!

இயற்கையை ஆள மனிதனைப் படைத்தாய்,
எதிலும் உந்தன் கருணையைக் கண்டேன்!
இயற்கையே இன்று மனிதனையழிக்க
இறைவா உன் முகம் ஏன் மறைத்தாய்?

குறையாய்க், குற்றுயிராய்க்
குன்றிய உடல் நிலையாய்ப்,
பிணமாய்ப், பிணவாடை வீசுகின்ற நிலமாய்,
இனியும் வேண்டாம் அழிவுகள்!
இத்துடன் முடியட்டும் அவலங்கள்!
தொடராய்த், தொடராய்ச் சோகங்கள்,
நிழலாய்த் தொடரும் நிலை மாற்று!
நிம்மதி பிறக்க வழி காட்டு!

எஞ்சியுள்ள உயிர்களினி
அழுவது பொறுத்து இருப்போமோ?
தஞ்மென்று அணைப்பதற்குத்
தாய் மண்ணுறவு நாமில்லையோ?
கஞ்சரெனவே வாழ்வதற்கு
எமது உள்ளம் ஒப்பிடுமோ?
பஞ்சம் உமக்கென்றாற்
பட்டினி நாம் கிடந்து
மிஞ்சும் பொருள் சேர்த்து
மிதத்தி விட மாட்டோமோ?
அஞ்சுதல் ஒழிப்பீர்!
ஆறுதலாய் நாமிருப்போம்!
நெஞ்சறையில் உம் நினைவே,
நெடுந் துயரம் மறப்பீர்!

■ ■

சுனாமி ஆற்றுப்படுத்தற் கவிதை

ஒளி சேர்க்கும் கதிரவன்
அடி வானிற் சிரித்த வேளை,
பழி தீர்க்கும் பகைவன் போற்
பாய்ந்து வந்த அலைக் கூட்டம்,
விழி இமைக்கும் நேரத்தில்
விரைந்து உயிர் குடித்ததனால்,
ஒளியிழந்த தேசமும்,
களையிழந்த மக்களும்!

சென்றதினி மீளாது
என்றெண்ணும் போது நெஞ்சில்,
நின்று, தங்கித் துயர் கொடுக்கும்
நீள நினைவுகளை,
வென்றெடுக்கும் சக்தியது
காலதேவன் கையிலுண்டு!

கார் முகில்கள் கதிரவனைக்
காலமெல்லாம் மறைப்பதில்லை!
நீரில் வாழும் நாணல் காற்றில்,
வேரிழந்து போவதில்லை!
பேரிடியும் சிறு மனதிற்,
பெருங் காலம் நிலைப்பதில்லை!

வேரிழந்த ஆலமரம்
விழுது கொண்டு வாழ்வது போல்,
வாழை மண்ணிற் சரிந்த பின்னும்
பரம்பரைகள் நிமிர்வது போல்,
போரில் வீரர் மடிந்த பின்னும்
புதிதாய் வீரர் எழுவது போல்,
காயப்பட்ட அடி மனதிற்
கண்ட பெரு வலிகளெல்லாம்,
காலத்தால் மாறி விடும்,
கவலைகள் தேய்ந்து விடும்!

வெந்துயரில் நொந்த உள்ளம்
வேதனைகள் மறக்கும்!
துன்ப நிலை எந்த நாளும்
தொடர்ந்திருந்தால் மண்ணதிலே,
எந்த உயிர் மீதமாக
வாழ்வதனை ருசிக்கும்?

மனித உயிர் மண் மீது
வந்த போதே போராட்டம்!
புனிதமெனப் போற்றுகின்ற
கருவறையில் உயிர்த்த போதும்,
உயிர்த்த உயிர் உருவாகி
உலகைப் பார்க்க வந்த போதும்,
போராட்டம்! போராட்டம்!

மதியிருந்தும் முடியாமல்
மக்கராகிப் போகின்ற
விதியோடு போராடும்
விதியாக மனித வாழ்வு!

வெந்து, வெந்து தினம்
வேதனைக் கடலில்
நொந்து, நொந்து மனம்
புடமாகும் போது,
சாதனைகள் புரியப் புது
சக்தி பிறந்தோடி வரும்!

சாதனைகள் கண்ட பல
சரித்திர புருஷரெல்லாம்,
வேதனைகள் சுமந்தவரே! - நற்
போதனையாய் அவர் வாழ்வு
நம்முன்னே உயர்ந்து நிற்க,
சாதனைகள் படைத்து - என்றும்
சரித்திரமாய் நிமிர்வோம்!

■ ■

தைமகள் வருகவே, தமிழ் நலம் தருகவே!

இம்மா நிலத்தில் நான் எவ்விடத்தே வாழ்ந்தாலும்,
அம்மா தமிழ்த் தாயே உனையணைத்தே புகழ் பெறுவேன்!
எம்மா துயர் வரினும் என் எழுதுகோல் உனையன்றி
சும்மாவேனும் வேற்று மொழி போற்றி வாழாதம்மா!

என் எழுதுகோல் சிந்தும் நீலக் குருதி மையில்
ஏக்கம் கலந்திருக்கும்!
பழுதுபட்ட என் தேச நேச உறவுகளின்
சோகம் கசிந்திருக்கும்! - அங்கு
அழுது, அழுது ஈரம் வற்றிப் போன கண்ணின்
சேதி சுமந்து கொண்டு,
எழுதும், எழுதும் என் பேனா இன்னும்
எழுதிக் கொண்டேயிருக்கும்!

இன்பத்தை வையமெல்லாம்
தெளித்திடும் தையே, வாராய்! - எம்
துன்பத்தைப் போக்கி வாழ்வில்
தூய நல்லன்பைத் தாராய்!
எங்கணும் தமிழர் வாழ்வில்
ஏற்றமும் புகழும் ஓங்க,
வாராய், தை மகளே வந்து
வல்லமை பலவும் தாராய்!

ஊரெல்லாம் தமிழின் பேச்சு,
உயிரிலே தமிழின் மூச்சு!
சீரெல்லாம் தமிழின் பாட்டு,
சிறந்ததெம் மொழியின் கூட்டு!

பாரெல்லாம் தமிழின் முழக்கம்
பாரதி சொன்னான் அது போல்,
வீரமா மொழியின் விளக்கம்
விளம்பிட வருவாய் தையே!

வங்கக் கடல் நடுவே
வளமான எம் தீவில்
தங்கத் தமிழரினம்
தவித்த கதை யாமறிவோம்!

அங்கம் பழுதுபட்டு
அலங்கோலமாய்ச் சிதைந்து
பொங்கும் கண்ணீரில்
புதைந்து விட்ட சோகங்கள், ஐயையோ!

பொங்கற் பானையிலே
எதை வைப்போம்?
பொங்குகின்ற உணர்வோடு
கண்ணீர் உப்பிட்டோம்!

முட்கம்பி வேலிக்குள்ளே
முனகலோடு கூக்குரல்கள்!
செவ்வாய் மலர்ந்து சிரிக்கின்ற சிறு குழவி
ஐயோ பசியென்று அழுகின்ற அவலங்கள்!

உய்யாதோ வாழ்வு என
ஏங்குகின்ற இளந்தளிர்கள்!
கை சோர்ந்து, மெய் சோர்ந்து
பை சோர்ந்த முதியவர்கள்!

வையகத்தில் எங்களினம்
வாழ்விழந்து வீதியிலே,
தைமகளே நீ வந்து
தவிப்பாற்று! - என்
தாய் நிலத்தைத் தமிழினத்தை
சிறப்பாக்கு, செழிப்பாக்கு!

எம் மனங்களிலே ஏக்கம் - இதனால்
ஆக்கும் கவிதையெல்லாம்
யாரெவரோ எமைச் சீரழித்தார் - அது
அவர்களையே தாக்கும்!

பார்க்கும் பொருளெல்லாம்
பைந் தமிழின் தோற்றம்!
வாராய் தை மகளே! - உன் வரவு
நீக்கும், நீக்கும் என்
தாய் நிலத்தின் ஏக்கம்!

பொங்கிடும் தமிழுணர்வாற்
போர்க்களம் குதித்து வீரர்
சிந்திய குருதி கண்டும்
சீர்படவில்லைத் தேசம்!

பண்படும் என்றே நாமும்
பார்த்திருந்தோமே அந்நாள்,
புண் பட்டுப் போனதம்மா
புகலிடம் ஏது சொல்வாய்!

அங்கொன்றும், இங்கொன்றும்
அலைக்கழிந்து எமது இனம்
எங்கெங்கோ வாழ்கின்றோமே
ஏற்றமில்லைத் தைமகளே!

ஓரமாய் நின்றோம் சில நாள்,
ஒதுங்கி நின்றழுதோம் பல நாள்!
வீரமா மண்ணிற் பிறந்தும்
விம்மல்கள் தணித்தோமில்லை!

பாரமாய் நெஞ்சில் நாளும்
படிந்திடும் கவலையெல்லாம்,
தூரமாய் அகலச் செய்யும்
தூய தைமகளே வாராய்!

மண்தொட்ட மாற்றான் படையை
விரட்டிய தமிழன் அங்கே!
மனந் தொட்ட வேற்று மொழியை
வரவேற்கும் சில தமிழர் இங்கே!

அன்னிய மொழி போற் தமிழை
அநாதையாய்த் தெருவில் விட்டுப்
பண்ணிடும் பூசையெல்லாம்
பரங்கியர் மொழிக்கேயென்றால்,
என்னினம் எங்கே.....? - தாய்

மண் விட்டுப் புலத்தில் வாழும்
தமிழர்கள் வாழ்வு நாளும்
விண்முட்ட உயர்தல் கண்டு
வியக்கின்றேன் தையே - ஆனால்

கண் கெட்ட கதையாய் நாங்கள்
கருத்தினிற் போற்றும் மொழியோ
புண்பட்டுப் போகும் நிலையைப்
புலம்புவேன் வேறென் செய்வேன்?

'கண்கள் இழந்த பின்னே கால்கள்
கல்லில் தடுக்கி விழ நேரும்!
உண்மை உணர்ந்த பின்னே தமிழே,
உணர்விலுன் ஆதிக்கம் வேண்டும்!'

உணர்வே தமிழாய்,
உயிரே தமிழாய் - உள் வாங்கும்
மூச்சும், பேச்சும் தமிழாய் ஓங்கத்
தைமகள் வருகவே!
தமிழ் நலம் தருகவே!

■ ■

சுதந்திரமும், பெண் விடுதலையும்

சுதந்திரம்

கதிரவன் தனது கதிர்களைப் பரப்ப
இருண்ட உலகம் ஒளியினை வாங்கும்!
உயர்ந்த பனைமர உச்சியினின்று
சிறகுகள் அடித்துப் பறவைகள் பாடும்!
சோலை தழுவிய தென்றல் வந்து
இதமாய் மேனியை வருடிச் செல்லும்!
கண்ணினின்று வழியும் விழி நீரை
விரல்கள் விரைவாய்த் துடைத்து எறியும்!
சுதந்திரம் வேண்டி ஏங்கிய விழிகள்
படபடவென்று இமைகள் அடிக்கும்!
பாலைக் குடிக்கும் குழந்தை நடுவில்
தாயைப் பார்த்து உதடுகள் விரிக்கும்!
இளம்பிறை எனவே அது தவழ்ந்து
எட்டி ஓரடி எடுத்து வைக்கும்!
கீழ்த்திசை வானிற் செவ்வொளி வீசும்
கதிரவன் வரவைக் கண்கள் காணும்!
எங்கும் சுதந்திரம், எதிலும் சுதந்திரம்
சுதந்திரம் என்றே உதடுகள் பாடும்!

■ ■

பொன் விலங்கு

கோழைகளே பெண்களென்று
கோடியிலே ஒதுக்கி வைத்தார்!
வாளைக் கொண்டு பிளந்தாலும் - மன
வலியுடையோர் ஆண்களென்றார்!
தேளைக் கண்டு பயந்தோடும்
தென்பற்றார் இவர்களென்று,
மூலைக்குள் பூட்டி வைத்தார்!
சேலை கட்டிய பெண்ணிவளைச்
சாலைக்கும் விட மாட்டார்!

சங்கு மாலைக் கழுத்து என்றார்,
அங்கமெல்லாம் தங்கமென்றார் - இவள்
தோளைப் பஞ்சு மெத்தையென
வேளைக்கொரு கவி படித்தார்!

ஆடும் மயிலெனப்,
பாடும் குயிலெனக் -
கார் முகில் வந்து
மூடும் குழலென - இவளைப்
பாடும் கவிஞர்கள் ஏராளம்!

பெண்ணே! காலங்காலமாய்க்
கண்ணுக்குத் தெரியாத
பொன் கூண்டுக்குள் நீ!
குனிந்த தலை நிமிராமற்
சிரிக்கின்றாய்!

குனிந்த உன் தலையை நிமிர்த்து!
துணிந்து பொன் விலங்கு தகர்த்து!
குவலயம் காண விழித்து - வெற்றி
எட்டுவாய் கால்கள் பதித்து!

■ ■

மூடிய முகத்திரை கிழித்து...!

மூடிமூடி முகத்தை முக்காடிட்டுப் பெண்கள்
மூலையிலே வாழ்ந்ததொரு காலம்! - இது
மாடி வீட்டில் மலர்ந்த பூவாயினும்,
தொடர்ந்தது இந்தச் சோகம்!

சாடிச்சாடிப் பெண்ணைச் - சில
சடங்கிற்குள் அடக்கி வைத்தார்!
சாத்திரங்கள் சொல்லிப் பெண்ணைச்
சமயலறையில் அடைத்து வைத்தார்!

பாத்திரம் கழுவிக் கழுவிப் பெண்கள்
பார்வையும் மாறிப் போச்சு! - ஆண்கள்
மாத்திரம் எழுந்தே
திடகாத்திரம் என நிமிர்ந்தார்!

இன்று காலமும் மாறிப் போச்சு!
முக்காடிட்ட முகத்திரை கிழித்துப் - பெண்கள்
திக்கெட்டிலும் வெற்றியெட்டுகின்றார்!
பக்கத்து வீடு தெரியாத பெண்ணும்
பார் சுற்றிவர - உலகப்
படத்தினில் ஏதோ தேடுகின்றாள்!

■ ■

அக்கினிப் பறவை

கோவையிதழ் அழகாள்
கொஞ்சுமொழி மறந்து
சாவைக் கடந்து ஓடுகிறாள்! - தமிழ்ப்
பாவை இவளென்று பாடுகிறாள்!

மாவைப் பிசைந்த கரங்களிலே,
மலையைத் தகர்த்தும் துணிவு கொண்டு
சாவைக் கடந்தும் ஓடுகிறாள்! - என்
பாவிற் புகுந்து, பண்ணிற் கலந்து
பைந்தமிழ் நங்கை பேசுகிறாள்! - என்
பாவில் வீரம் பூசுகிறாள்!

சந்தம் மிகு கவி கொடுத்திடவே,
வந்து சொல்லழகாயமர்ந்து - நயம்
பொங்கும் தமிழிற் சிரிக்கின்றாள்! - என்
சிந்தை முழுதும் நிறைகின்றாள்!
சிறக்கும் கவியாய் விழுகின்றாள்!

கவியாய்க், கவியின் பொருளாய், - என்
வழியாய், ஒளியாய் இருப்பவளே!
அழியா வீரப் பெருமகளே!
அணிவேன் என்றும் உன் வீரம்!

■ ■

சின்னஞ்சிறு கிளியே...

16

மழலையின் சிரிப்பு

குழந்தையின் சிரிப்பினில்
வஞ்சமில்லை - ஒரு கஞ்சமில்லை!
குற்றத்தில் துடிக்கின்ற
நெஞ்சமில்லை - அன்பிற் பஞ்சமில்லை!

குவலயமே ஒரு குழந்தையின் சிரிப்பினிற்
குறைகளை மறந்திடும் - இதில்
ஐயமில்லை - எந்தப் பொய்யுமில்லை!
குழந்தையும் தெய்வமும்
குணத்தாலொன்று! - ஆதலால் நாமிங்கு
குழந்தைகளாவோம்!

புத்தாண்டதிலே புதிதாய்ப் பிறப்போம்!
குறைகள் நீங்குக,
குற்றங்கள் நீங்குக!
குணத்திலே எல்லோரும்
குழந்தைகளாகுக!
எல்லாம் புதிதென மாறுக! - இனி
எல்லாம் புதிதென மாறுக!

■ ■

கல்லுடைக்கும் தொழிலில் சிறுவர் படும் அவலம்

அறிவு எனும் செங்கோலால் - இவர்
அகிலத்தை ஆளுகின்ற பிள்ளை!
வலிய வரும் வறுமையின் தொல்லை,
அறியாமல் உடைக்கிறார் கல்லை!

வெண்ணிறத்துக் குழந்தையிவர்,
வெய்யிலிலே கறுத்துப் போனார்!
பண்ணெடுத்துப் பாடச் சொன்னால் - மனம்
பரம்பொருளை வைகிறது!

பொன்னிறத்து மேனியது
பொசுங்கும் வெய்யிலிலே,
தன் வயிற்றை நிரப்புதற்குத்
தானே உழைக்கும் நிலை!

மண்ணிடத்து மனிதர்க்கெல்லாம் - குருதி
செந்நிறத்தில் ஓடுமல்லோ?
எந்நிறத்து மனிதரிலும் - மனிதம்
ஒட்டிக் கொண்டே பிறக்குமல்லோ?

பின்னெதற்கு வேற்றுமைகள்?
எண்ணிறைந்த பணம் படைத்தோர்
வாழுகின்ற பூமியிலே,
பின்னெதற்கு வேற்றுமைகள்?

என்னினிய பாவலரே ஏடெடுப்பீர்! - எழுதுகோலால்,
இறுகிய இதயங்களின்
இறுக்கங்கள் உடைப்பீர்! - இக்
கண்மணிகள் வாழ்வதற்குக்
கவியாலொரு மனுக் கொடுப்பீர்!

■■

வறுமையிலும் செழுமை

சின்னஞ் சிறு மலரே! - உன்
கன்னக் குழி விழப்
புன்னகைக்கும் அழகிலென்
கவலை மறந்தேனே!

வறுமையிலும் வாய் மலர்ந்து
சிரிக்கும் இளந் தளிரே! - உன்னை,
வெறுமை என்றெண்ணியவர்
வெட்கிப் போயினரே!

ஏழ்கடல் தாண்டியும்
பாழ்படும் நெஞ்சினில்
அமைதியில்லாதொரு வறுமை!
ஓடோடி உழைத்துக்
குவித்திட்ட போதிலும்,
எல்லாமும் இங்கே வெறுமை!

தட்டினை ஏந்திய கைகளேயானாலும்
தடுமாற்றம் இல்லாத உன் பார்வை!
வறுமையின் சின்னங்கள்
வரித்திட்ட கண்ணே!
எங்கேயடி கற்றாய் பொறுமை?

இலவசமாய் உன்
இதழ் சிந்தும் சிரிப்பிலெம்
இதயங்கள் நிறைவது உண்மை! - சில
இறுகிய இதயங்கள்
புன்னகையுதிர்ப்பதில்
இன்னமும் ஏனடி வறுமை?

■ ■

சிறு வயதிற் குடும்பச் சுமை

ஆண்டவா உன் படைப்பினில்
உயர்வென்றும், தாழ்வென்றும்
பிரிவில்லையே!
உலகத்து உயிர்களில்
உன்னத உயிராம் மனிதனின்று,
உவகை கொண்டொழுகுவதில்
வேற்றுமை கண்டேன்!

காற்றையும், மழையையும் - இளங்
கீற்றிடை மின்னும் வெயிலையும்,
நாற்று வளர்ந்து செழிக்கும்
நன் நிலத்தையும்,
போற்றும் தேவர் வாழும் ஆகாயத்தையும்,
சீற்றம் பொங்கச் சீறி எரியும் நெருப்பையும்
இயற்கை எழிலையும்,
எல்லாவுயிர்க்கும் பொதுவில் வைத்தாய்!

உயிர்களில் ஏனோ
உயர்வென்றும், தாழ்வென்றும்
பொருள் வைத்தாய்?

மாடியிலே சில மனிதர்
மதுக் கிண்ணத்தில் மிதக்கின்றார்!
மண்ணிலே சில பயிர்கள்
மடிப் பிச்சை எடுக்கின்றார்!

உல்லாசமாய் சிலர் வாழ்வை
உவகையிலே கழிக்கின்றார்!
திண்டாட்டமாய்ப் பலர் வாழ்வில்
பெரும் சுமைகள் சுமக்கின்றார்!

சின்னஞ் சிறு வயதினிலே
சுமை தாங்கும் கோலமென
ஏன் இறைவா? ஏன் இறைவா?

வழமையிது, வழமையிது
வளரும் நிலை காண்கின்றேன்!
செழுமை மிகு உலகினிலே
செழிக்கும் நிலை தோன்றாதோ?

■ ■

அம்மா

அம்மா

மாதங்கள் ஈரைந்து
மறுக்காமல் எனைச் சுமந்து - பஞ்சுப்
பாதங்கள் நோகாமல்
பக்குவமாய் வளர்த்து விட்டாய்!

மனக் காயங்கள் உன்னோடு
உனக்கு மட்டும் - அது
எனக்கேனோ புரியவில்லை
எண்ணிரண்டில்!

உன் இதமான இதயத்தை
இறுக்க மிதித்து விட்டுக்
கனமான கவலையொன்றை - உன்
மனத்தினிலே தேங்க விட்டேன்!

சுகமான வாழ்வொன்றை
இதமாக நான் தேடிப்,
பதராக உன்னையங்கு
பரிதவிக்க விட்டு விட்டேன்!

காலதேவன் காத்திருந்து
கவலையொன்றை என் மனதிற்
கருவின் வடிவினிலே
கச்சிதமாய் வளர விட்டான்!

வாழ்க்கைச் சக்கரங்கள்
வடிவான சுழற்சியிலே,
தாயாக நீயன்று!
இன்னுமொரு தாயாக நானின்று!

என் மகனும் என்னைப் போற்
தாய் மனதைத் தவிக்க விட்டுத்
தனியாக ஒரு வாழ்வை....?
ஐயையோ வேண்டாமம்மா!

எண்ணுகின்ற போதெல்லாம்
என் கண்கள் குளமாகி,
எல்லாம் வல்ல இறைவனையே
ஏங்கி நோக்குதம்மா!

■ ■

கருவாக எனைச் சுமப்பாயா?

அம்மா!
கருவறையில் என்
உயிர் சுமந்தவளே!

உன் பருத்த வயிற்றினுள்ளிருந்து - என்
பாதங்களால் உதைத்த போதும்,
தாங்கிக் கொண்டாய்!

பருவமடைந்து நான்
பாவையெனப் பெயர் கொண்டு
காதலிலே வீழ்ந்த போதும்
ஏற்றுக் கொண்டாய்!

வாழ்க்கைப் பாதையில் - வெகு
தூரம் நடந்து என்
கால்கள் வலிக்குதம்மா! - நான்,

கண்மூடி இளைப்பாற வேண்டும்!
நிழலாக நீ வருவாயா?
துயில் கொள்ள - உன்
மடி தருவாயா?

துன்பக் காற்றின் வெப்பத்தில் நான்
கருகிப் போகுமுன்,
தென்றலாக நீ வருவாயா?
தேற்றி என்னைக்
குளிர வைப்பாயா?

என் மீறுதல்கள் - என்
மூச்சுக் குழாய்களைப்
பிடித்து அழுத்து முன்
சுவாசமாக நீ வருவாயா? - எனக்கு
மீண்டும் உயிர் தருவாயா?

மீண்டும் ஒரு சென்மம் வந்தால்,
துடிக்கின்ற என்னுயிரை - உன்
கருவறையுள் உயிர்க்க வைப்பாயா?
கருவாக எனைச் சுமப்பாயா? - அம்மா,
கருவாக எனைச் சுமப்பாயா?

■■

காதல்

என்னில் நீயாக வா!

உன் மூச்சை நான் வாங்க வேண்டும்
என் மூச்சை நீ வாங்க வேண்டும்!
உன் மூச்சும் நானாக வேண்டும்
என் மூச்சும் நீயாக வேண்டும்!

கலைந்த உன் கேசம் வருடிக்
கையில் உன் முகம் தாங்க வேண்டும் - என்
கண்ணீரை நீ வாங்க வேண்டும் - உன்
கண்ணின் மணி நானாக வேண்டும்!

நெற்றியை முத்தமிட்டு - உன்
நெஞ்சில் என் முகம் சாய்க்க வேண்டும்,
உள்ளமும் உள்ளமும் பேச வேண்டும்
உன் மார்பிலேயே நான் தூங்கிப் போக வேண்டும்!

காயப்பட்ட இடத்தைக் காட்டு - என்
அன்பாலதை வருட வேண்டும்!
காலமெல்லாம் உன்னெதிரே - நான்
குழந்தை போலச் சிரிக்க வேண்டும்!

என்னுடலைப் பிளந்து உள்ளே வா,
உயிரும் உயிரும் சேர வேண்டும்!
உணர்வு முழுதும் உன் எண்ணம் தா - உன்
விம்பமாய் நானாக வேண்டும்!
கண் மூடி நான் துயிலும் வேளையிலும் - என்
கனவும் நீயே ஆக வேண்டும்!

காயங்கள் ஆற உன் அன்பைத் தா!
காலம் முழுதும் என் நிழலாய் வா!
துன்ப நினைவும், சோக உணர்வும்
அன்பால் மறப்போம் என் அன்பே வா!

■ ■

அறியாத பருவத்துக் காதல்!

சொட்டும் தேனைச் சுவைப்பது போலே,
சொப்பனங்கள் காட்டும் காதல்!
தொட்டும், விட்டும், எட்டியிருப்பதால்
ஒட்டியிருக்கவே தோன்றும்!

காதலி சொற்களே வேதங்களாகும்,
கண்ணின் கடைப் பார்வை வீரத்தில் ஏற்றும்!
காணுமிடமெல்லாம் கவிதைகளாகும்,
காதலி முகமே கருப் பொருளாகும்!

எண்ணும், எழுத்தும் ஏனென்று தோன்றும்!
எண்ணம் முழுதும் இன்பத் தேன் வந்து பாயும்!
உண்ணும் உணவும், உறக்கமும் தொலைத்தே,
கண்ணும், கண்ணும் சந்திக்க ஏங்கும்!

சந்தித்துப் பிரிகையிற் துயர் வந்து சூழும்,
தவிப்பு மட்டுமே மீதியென்றாகும்! - மனப்
பொந்துக்குள் இவர்கள் சிந்தித்ததெல்லாம் - வெறும்
புகழ்ச்சிகளாகவே தலையெட்டிப் பார்க்கும்!

புகழ்ச்சியால் மனமது மயக்கத்தில் மிதக்கும்,
புத்துலகமொன்று கண்முன்னே விரியும்! - இது
காமத்துக் காதலா, கருத்தொத்த காதலா,
பகுத்தறியா நிலை இப் பருவத்திற் தோன்றும்!

■■

உண்மைக் காதலெது?

வண்ணக் கனவுகள் வாசலில் அழைக்கும்
வாலிபப் பருவம்!
வாவாவென்று சாலங்கள் காட்டியே
சிந்தையை மயக்கும்!

எண்ணம் முழுதும் இன்பச் சாரல்
அடிப்பது போலே - காதற்
கள்ளுண்ட மயக்கம் காதலர் கண்களைக்
குருடென ஆக்கும்!

இன்பக் கனியைப் பறித்து, ருசித்துப்
புசிப்பதா காதல்?
துன்பக் கடலில் மூழ்கும் போதும்
துடிப்பதே காதல்!

துடிக்கும் போது வெடிப்பது எல்லாம்
தும்மற் காதல்! - கண்ணீர்
வடிக்கும் போது துடைப்பது தானே
உண்மைக் காதல்!

நினைக்கும் போது வருவது எல்லாம்
நீர்க் குமிழ்க் காதல்! - உள்ளம்
கனக்கும் போது சுமப்பது தானே
நிலைத்த காதல்! - ஆதலாற்

கருத்தொருமித்த காதல் செய்வீர்,
காலமெல்லாமது தழைத்தோங்கும்!

■ ■

அழுகை

தொடக்கமும், முடிவும்
எமது இல்லை! - நீ
தொடங்கிய நாடகம்
புரியவில்லை!

குழப்பமும், வலிகளும்
அகலவில்லை! - நீ
குடியிருக்கும் நெஞ்சில்
அமைதியில்லை!

உறக்கம் என் கண்களைத்
தழுவவில்லை!
உனக்கும் என்னை ஏனோ
புரியவில்லை!

பிறப்பினிற் தொடங்கிய
அழுகையினை
நிறுத்தும் வகை இன்னும்
தெரியவில்லை!

■ ■

எங்கும், எதிலும் நீ!

எங்கும், எதிலும்
நீ! - என்
ஏற்றமும், தாழ்வும்
நீ, நீ, நீ!

பொங்கும் இன்பம்
நீ! - என்னுட்
பொருந்தி விட்டவன்
நீ, நீ, நீ!

தங்கும் மகிழ்வே
நீ! - என் மேற்
தாகம் கொண்டவன்
நீ, நீ, நீ!

சிந்தும் வானம்
நீ! - என்னைச்
சிலிர்க்க வைப்பவன்
நீ, நீ, நீ!

அந்தம் இல்லாக்
காதலிலே - என்னுள்
ஆழப் பதிந்தவன்
அழகே நீ!

வந்தும் போயும்
கண்ணெதிரே, - என்னை
வாட்டுவதேனோ
அன்பே நீ!

■ ■

காதலில் தொலைந்த கணங்கள்

உன் நீள வானிலே
ஒற்றை நிலவாய்
மீண்டும், மீண்டும் நான்
தனித்து விடப்படுவதாய்
உணர்கின்ற வரையில்,
காதலிற் தொலைத்த கணங்கள்
எனக்கு வலிக்கவில்லை தான்!

அலையைப் போல
பல தடவைகள் நான்
அலைக்கழிக்கப் பட்டும்,
உனக்குள் ஆனந்தமாய்த்
தவழ்வதாகவே
மகிழ்ந்து கொண்டேன்!

என் உணர்வுகள்
உன்னால் மிதிக்கப் பட்டும்
வதைக்கப் பட்டும்

மீண்டும் நான்,
தொட்டாற்சுருங்கியைப் போல்
உன்னிடமே
மண்டியிடுகிறேன்!

புரிந்து விட்டதைப் போலவும்,
பல தடவைகள்
புரியாததைப் போலவும்
உனக்குள் நான்
தொலைந்து விட்ட காலங்களில்...

காதலிற் தொலைத்த கணங்களை
மீட்டுப் பார்க்கிறேன்...!

அடைந்து விட்டவற்றைக் காட்டிலும்
இழந்து விட்டவை
விலை மதிக்க முடியாதவையும்
மீளப் பெற முடியாதவையும்
என நான் எண்ணும் போது,
காதலிற் தொலைந்த கணங்களில்
வேதனையே தொக்கி நிற்கிறது!

வால்வெள்ளியைப் போல்
தொலைதூரம் பறந்து
சிறு புள்ளியாகிப், புள்ளியாகி
உன் வானிலிருந்து - நான்
முற்றாக விரட்டப் படுவதான
ஜயப்பாடு தோன்றுகின்ற வரையிலும்,

வசந்தத்தைக் காட்டுவதாக
வாக்களித்து நீ
வனாந்தரத்தின் வாசல்களில்
எனைக் கை நெகிழ்ந்து
கையசைத்து மறைவதான
காட்சிகள் விரிகின்ற வரையிலும்,

பனி படர்ந்த தெருக்களில்
உனக்கான கடமைகளைச்
சுமந்து கொண்டு, அங்குமிங்கும்
அலைக்கழிக்கப் பட்டும், இறுதியில்
அனாதரவாய் விடப்படுவதான
அவலங்கள் நிகழ்கின்ற வரையிலும்,

காதலிற் தொலைத்த கணங்கள்
எனக்கு வலிக்கவில்லைத் தான்!

உனக்குள் உள்வாங்கப் பட்டும்,
உதறப் பட்டும்
மீண்டும், மீண்டும்
வினாக் குறியாய் மனது
உன்னிடமே விடை தேடுகின்றது!

எம் பாதைகளில்
கற்களையும், முட்களையும்
காலம் முளைப்பித்திருக்கலாமெனவே
உள் மனம் எச்சரிக்கின்றது!

என் பேனா முனை
ஒரு வேளை உன்னைக்
காயப்படுத்தலாம்! - உன்
மௌனம் என்னைக்
காயப்படுத்தியதை விடவா....?

காற்றில் கரைந்து விட்ட
கற்பூரத்தை உன்னால்
அடையாளங் காட்டக் கூடுமானால்,
உனக்குட் கரைந்து விட்ட
அல்லது, தொலைந்தே விட்ட
என்னையும் வேறுபடுத்திப் பார்க்க
நீ முயலலாம்!

சிலையைப் போல நானிருந்தேன்!
சிற்பி நீ எனை மறுபடி
செதுக்க முயன்றாய்,
நான் சிதைந்தேன்!

மழையைப் போல வந்தாய் - என்
மடியில் வீழ்ந்தாய் மகிழ்ந்தேன்!
உடைந்த வானம் பொழியும் என்ற
கவிதை என்னிற் சுமந்தேன்!

உடைந்த வானம் பொழிந்ததாலே
உடல் முழுதும் நனைந்தேன்!
உடல் முழுதும் நனைந்ததாலே,
ஊறும் கண்ணீர் மறைத்தேன்!

■ ■

களத்தில் இருக்கும் வீரனுக்குக் காதலியின் கடிதம்

(அகமும், புறமும் தொகுதிக்காக எழுதிய அகத்துப் பாடல்)

உன் மௌனத்திற்குப் பின்னால்
மறைந்திருக்கும் மர்மங்கள்
விடை காண முடியா
அகல வெளிக்குள் என்னை
அலைக்கழிக்கின்ற பொழுதுகளிலும்,

நகர்ந்து சென்ற கடினமான நாட்களில் நீ
பதித்துச் சென்ற பாதச் சுவடுகளில் என்
பஞ்சுப் பாதம் பட்டு,
உன் ரணம் என்னுள்
நெருப்பாய்க் கனல்கிறது!

என் நினைவுகள் என்னையும் மீறி
உன்னிடத்திற்கு என்னைக்
காவி வரும் தருணங்களில்,
வெறித்த உன் கண்களின் ஆழத்தில் ஒளிரும்
நம்பிக்கைக் கீற்றின் வெளிச்சத்தில்
உடல் என்னுயிரை இன்னமும்
சுமந்து கொண்டிருக்கிறது!

விடிந்த பின்பும் விடியலைத் தேடும்
பார்வையிழந்த என்
சகோதரனைப் போல
என் பகற் பொழுதுகள் ஏங்கியபடி
இருட்டிலே கழிகின்றன!

இரவின் மௌனத்தைக்
கிழித்துக் கொண்டு வரும்
அலறல்களிலும், என் மோதிர விரலை
இறுகப் பற்றிக் கொள்கிறேன்!
அதுவும் என்னைப் போற்
காத்துக் கிடக்கிறது,
உன் கணையாழிக்காய்!

மூங்கில் மரங்கள் மோதும் இசையில்
உன் ஸ்வரங்கள் தொனித்தாலும்,
என் உள்ளம்
அடிபட்டுக் கசிகிறது - அந்த
உடை பட்ட நாதத்தில்!

கைகளை நெஞ்சிலே அழுத்தித்
தரையிலே சாய்கிறேன்,
நெஞ்சம் அனலாய்ச் சுடுகிறது!
நீ அங்கிருந்து தானே
பெரு மூச்சு விடுகிறாய்!

தனிமையும், வெறுமையும்
தந்த வெற்றிடங்களால் - வாழ்வு
வெறிச்சோடிப் போனாலும்,
நாட்கள் நகர்கிறது
நம்பிக்கைத் தேரைக்
கட்டியிழுத்த படியே!

நான் மறுத்தும் உன்
ஞாபகங்கள் என்னைப்
பலாத்காரமாய்க் கவ்விக் கொள்ள,
காட்டு மல்லி போலே துயரங்கள்
நாசியை அரித்தாலும், - நீ
உயிரோடு இருக்கிறாய்
என்பது மட்டுமே - என்
ஆயுளை நீளச் செய்கிறது!

குழைந்து வருடிச் செல்லும்
தென்றற் காற்றின் சுகமறிய முடியாமல்,
மரணப் படுக்கையிற் கடைசிச் சொட்டுத்

தண்ணீருக்காய் அவதிப்படும்
நோயாளியைப் போல - என்
கடைசி வினாடிகளிலும் கூட,
உன் பார்வைக்காகவே நான்...

துன்பத்தை விழுங்கிக் கொண்டும் - என்
காதுகளைக் கூர்மையாக்குகிறேன்!
தூரத்திலே கேட்கும் உன்
காலடி ஓசைக்காய்!

■ ■

உன்னால் முடியும்!

சூரன் போர்

படையெனத் துன்பங்கள்
புடை சூழ வரினும்,
விடையிதுவென்று
விரக்தி கொள்ளாதே!

குடையெனக் காக்கக்
குருபரனுண்டு,
தடைகளை உடைத்துத்
தாபரித்தருள்வார்!

இடையிடை இன்னல்கள்
இது போல் எழலாம், - நீ
உடைந்தழுவதனால்
ஒரு பலனுண்டோ? - உன்
நடைகளைத் தேவன்

நன்கே அறிவார், - நற்
கொடைகளை உனக்கு
நாளும் அருள்வார்!

வேதனை, சோதனை, துன்பம், துயரம்
அசுரனைப் போல உனைத் தாக்கிடலாம்!
ஆண்டவன் கரமது உன்னோடிருந்தால்,
அவரே உனக்காய் அசுரனையழிப்பார்!

துயரத்தில் இறைவனைக் கடிந்து கொள்ளாதே,
துவளினும் தூயவன் மலரடி தொழுவாய்!
கவலைகள் போக்கிக் காத்தருள்வதற்குக்,
கடவுளின் கரங்கள் குறுகுவதில்லை!

■ ■

ஒளியிழந்த கண்களிலே நம்பிக்கை ஒளியேந்தி

உடலுண்டு, உயிருண்டு,
உயிர்களுக்கு உணர்வுண்டு!
வாழ்விருந்தால் வலிகளுண்டு,
வலிய வரும் துயர்களுண்டு!

நோயுண்டு, நொடியுண்டு,
நொந்து மடிகின்ற பொழுதுண்டு!
இருப்பினும் இறந்தோமா?
இடர் கண்டொழிந்தோமா?

துடுப்பிழந்த தோணியென
நடுக்கடலில் நாங்கள்,
நம்பிக்கைத் துடுப்பெடுத்தோம்! - அதை
நாங்களே வலித்தோம்!

கைகள் இரண்டும் முடமானால்,
கால்களால் வலிப்போம்!
நமக்கான திசையை
நாமே நிர்ணயித்தோம்!

குறியுண்டு, நெறியுண்டு,
குறிக்கோளிலே தெளிவுண்டு!
நெடுந் துயரம் தொட்ட பின்பும்,
நெஞ்சினிலே திடமுண்டு!
வாழ்க்கையிலே சோர்ந்த பின்பும்,
நம்பிக்கை ஒளியுண்டு!

கண்கள் இரண்டும் ஒளியிழந்தால்,
அகக் கண்கள் பார்க்குமே! - அது
ஆயிரம் பலம் சேர்க்குமே!

■ ■



ஆமையும் முயலும் கதை கூறும் தத்துவம்!

விடா முயற்சி வெற்றி தரும்! - வெறும்
வீரப் பேச்சு விழலென ஆகும்!
படாரென்று உடல் சோர்ந்து
பாதி வழியில் நீ
படுத்துறங்கி விழிக்கையில்,
தொடா நிலவைத்
தொட்ட ஆம்ஸ்ரோங் போல் - உலகம்,
விடாது, விடாது முந்திக் கொண்டிருக்கும்!

வெற்றிப் படிகள் கண்ணுக்கெட்டாத
தொலை வானமாக - உன்
வீரப் பேச்சு முகங் கவிழ்ந்திருக்கும்!

வீரக் கதைகள் பேசி,
வெறுங்கை வீசி நடந்தோரைப் - பூமி
பாரமென்றே தாங்கும்!
நேரம் பொன்னெனக் கருதி - வாழ்வைச்
சாரமாக்கும் மனிதரை,
விழுதுகள் கூட வாழ்த்தும்! - நாளைய
விழுதுகள் கூட வாழ்த்தும்!

■■

அடிமைக் கூட்டைத் திறவாயோ?

மாட்டை அடிப்பது போல்,
சாட்டை கொண்டுன்னுடலை
வாட்டி வதைத்தாலும் - வாயின்
பூட்டைத் திறவாயோ? - மனிதா!
அடிமைக் கூட்டைத் திறவாயோ!

கிழிசல் செய்துன் மேனியதைக்
கீறிக் காயப் படுத்துகிறார்! - கண்ணீர்க்
கரைசலில் துன்பம் கரைந்திடுமோ?
கயவர் இதயம் கனிந்திடுமோ?

அழுது, அழுது தேம்புவதால் - உன்
விழுது நிமிர்ந்து வேர் பெறுமோ?
தொழுது, தொழுது வாழ்வதனால்,
தொடரும் துன்பம் அறியாயோ!

வலிகள் உனக்கே சொந்தமல்ல! - உன் முதுகு,
வளைந்தே இருப்பதும் நியாயமல்ல!
குனிந்து, குனிந்தே நீ இருந்தாற்
குட்டுவோன் கைகள் ஓங்கிடுமே!

ஓங்கிய கையைத் தாங்கியே நிறுத்து!
வாங்கிய வலியை வலியோனுக்கே
வழி அனுப்பு!

தெளிவு பெற விழிப்பாய்!
தொடரும் பகை ஒழிப்பாய்!
தோல்வி கண்டும் சிரிப்பாய்!
தோல்வி உன்னில் தோற்று விடும்
விந்தை காண்பாய்!

■■

இயற்கையும் மனிதனும்

பனை மரம்

ஆண்டவன் படைப்பினில் - பல்
ஆயிரம் அதிசயங்கள்!
அளப்பரிய அதிசயம் தான்
அவன் படைத்த பனைமரங்கள்!

பாரினிலே பல மனிதர்
பதராக வாழ்கையிலே - நீ
பரம்பரை பரம்பரையாய்ப்
பயன் கொடுக்கும் மரமாகி,
ஊரிலே பல மனிதர்
உன் சாயல் காணும் வண்ணம்,
வானுயர்ந்த மரமாகி
வளர்ந்து நிற்கின்றாய்!

வானுயர ஓங்கி வளர்ந்த பனைமரமே!
வேண்டும் மானிடனில் உன் சாயல்!
தானும் உன்னைப் போற்
தனக்கல்லாற் பிறருக்காய்,
வாழ்ந்து பயன் கொடுத்து
மடியும் குணம் பெற வேண்டும்!

புயல்

உறவுகள் முறிவது
மனிதனின் சீற்றம்,
புலவுகள் அழிவதும்,
புயலென எழுவதும்
இயற்கையின் சீற்றம்!

கூற்றுவன் என வரும் காற்றினையடக்கி
மாற்றுதல் செய்ய ஒரு வழியுண்டோ? - பாவச்
சேற்றினிற், சேற்றினிற் பாவி மனிதன்
நாளும் புரள்கையிலே,
வாழ்க்கையிலே வரும் துர்நாற்றம்! -- துர்
நாற்றமும் நாளடைவில்
நறுமணமாய்ச் சிலருக்கு வீசும்!

போற்றுதற்குரிய வாழ்வை விலக்கி - மனம்
கால் போன போக்கிலே போகும்!
கண்களும் குருடென ஆகும்! - இந்த

மாற்றத்தினின்று மகிழ்ச்சியைக் காணவே
காட்டுகின்றான் இறைவன் சீற்றம்!
இதை நன்கு உணர்ந்தால்,
இயற்கையும் மனிதனிடம்
பணிந்தே போகும்!

இயற்கையும் மனிதனும்

சூரியன் வரவு கண்டு
தாமரை மலரும்!
கார் மேகம் கண்டு மயில்
தோகை விரித்தாடும்!
வான்மதி கண்டு அல்லி
மொட்டு இதழ் விரிக்கும்!

சூரியக் கதிர்கள் சுட்டெரித்த போதும்,
தாமரை அதனை
இதழ் மலர்ந்து தாங்கும்!
வெயில் என்ன கொடுமையென்று
குளிர் நிலவா கேட்கும்?

நிலவினைத் தரிசிக்கும்
அல்லி மலர் கூட
அகமகிழ்ந்தாயிரம் இரவுக்கு ஏங்கும்!

நிலவொளி அதற்கென்ன
சலித்தா போகும்?

அழகு மயிலாடக்
கார் மேகம் கேட்கும்!
காத்திருத்தல் என்ன,
கனவாகியா போகும்?

இயற்கையில் இவையெல்லாம் நியதிப்படி!
உணர்வுள்ள மனிதன் மட்டும்,
ஏன் கால்கள் இடறி?

■ ■

மென்மையும் வன்மையும்

பெண்களை விற்பனைப் பொருளாக்கும் இன்றைய சில திரைப்படங்கள் பற்றிய எனது கருத்து:

சினிமாப் பெண்மை

கற்பினையுயர்த்திக் கதைகள் கூறும்
காவியம் பிறந்த பாரத நாட்டில்,
விற்பனைப் பொருளாய்ப்
பெண்களைக் காட்டிச் - சினிமா
வித்தைகள் புரியும் பல மனிதர்! - பெண்மை
செத்ததோ என்று எண்ணிடத் தோன்றும்
தேகம் கூசும் காட்சிகளும்,
பச்சையாய்ப் பெண்ணைக்
கொச்சைப் படுத்தும்
நோக்கினையுடைய பாடல்களும்,
இச்சையைத் தூண்டி இள வயதினரை
ஈர்க்கும் காட்சி அமைப்புகளும்,
மொத்தமாய் அமைந்த திரைப்படங்கள்
குப்பையெனவே ஏராளம்!

திரைப்பட உலகிற் கலப்படம் செய்து
புதுமையெனவே புதிதாய்ப் புதிதாய்ப்
புதுப் புது மாற்றம் புகுத்துகிறார்! - தமிழ்க்
கலைகளிற் சாயும் பூசுகிறார்!

மேற்குலகின் கலையின் சாரம்
தமிழிற் புகுந்தாற் தமிழழியும்!
வேற்று மாந்தர் செய்கையும், கொள்கையும் - எம்
நாற்றிற் கலந்தால் நஞ்சாகும்!
இந்நிலை தொடர்ந்தால்,
இனி மேல் எப்படித் தமிழ் வாழும்?

அதனால் இனி வரும் திரைப்படமே!
தமிழர் விழியாய் நீயிருப்பாய்! - தமிழ்
செழிக்க வழிகள் நீயுரைப்பாய்!

■ ■

நாகரிக மங்கை

உடலை மூடிய சிற்றாடைக்குட் தெரியும்
அழகும், அசைவும் மாயை!
விடலைப் பருவமென்ன? - சில
விழுதுகளும் இதில்
சிக்குவதென்ன லீலை!

வாழைத் தடலையொத்த காலழகு! - வடிவம்
சிறுத்துப் போன உடையழகு! - இது
நாகரிகத்தில் பெண்மையைத்
தொலைத்த உலகு! - இந்த
மாயையை விட்டு நீ விலகு! - மனமே!
ஞானப் புரவியேறு!

கற்க வேண்டியது கடலளவு!
கால்களின் வனப்பில்
மயங்கும் வயது!

கண்களிரண்டு ரசிப்பதற்குக்,
காட்சிப் பொருளாய்ப் பெண்ணிருக்கு!

கண்ணிரண்டு கொண்டு பெண்ணை
அன்னையென நோக்குங்கால்,
தவிப்பும், மோகமும்
தானாய் அடங்கி விடும்!

பெண்ணே!
விண்ணுலகம் வியக்கும் வகை
நீ விந்தைகள் புரிந்தாலும்,
மண்ணுலக ஆண்களெல்லாம் - உன்னை
அன்னையென்று போற்றும் வண்ணம்
அடக்கமான உடையணிவாய்!

அடக்கமும், பண்புமே - உன்னை
அன்னையென அடையாளப் படுத்தும்!

■ ■



ஔவையார்

அகரம் முதலாம் எழுத்தெல்லாம்
அதனதன் வரிசை முறைப்படியே,
அழகாய்த் தொடுத்து ஆத்திசூடி
அளித்த ஔவைப் பாட்டியாரே!

கொன்றைப் பூவை அணிந்துள்ள - சிவன்
செல்வப் புதல்வன் விநாயகரைத்
துதித்துப் போற்றிக் கொன்றை வேந்தன்
தொடுத்துக் கொடுத்த ஔவையாரே!

சிறுவர் இதயத்துள்ளுணர்வில்
ஒளிரும் விளக்காய் நல்வழியும்,
அறிவுரையாம் மூதுரையும்
அழகாய்க் கொடுத்த ஔவையாரே!

பெருந்தகை வள்ளல் அதியமானின்
நெல்லிக் கனியதை உண்டதனால்,
நீண்ட நாட்கள் உயிர் கொண்டு
உலகில் வாழ்ந்த காலமதில்,
ஞானக் குறளும், நல்ல தமிழ்ப் பாவும்
நமக்காய் அளித்த ஔவையாரே!

சிறுவன் முருகன் உன்னிடத்தில்
சில்மிஷங்கள் செய்ய எண்ணிப்
பெரிய நாவல் மீதிருந்து
கனிந்த பழத்தை உலுப்பி விட்டான்!

மணலில் விழுந்த கனியதனை
மகிழ்ந்து நீயும் எடுத்தூத,
மரத்திலிருந்த முருகனவன் - நீ
மலைக்கும் படியே வினாத் தொடுத்தான்!

மண்ணிலிருந்த நாள் வரைக்கும்
மருகன் முருகன் புகழ்பாடித் - தமிழின்
கண்ணாயிருந்த ஔவையாரே!
காலமெல்லாம் உன்னைத் தமிழ் வாழ்த்தும்!

■ ■

விண்ணப்பம்

மனித நேயம்

மரணித்த மனித நேயம்
உயிர் பெறுதல் வேண்டும்!
மனங்களிலே வேரூன்றிப்
படர்தல் வேண்டும்!

மண்ணிலே மானிடர் கை
இணைதல் வேண்டும்!
பேதமில்லா உலகமொன்று
உருவாக வேண்டும்!

முள்வேலிகள் யாவும்
உடைந்து விழ வேண்டும்!
முடங்கிய மானிடம்
நிமிர்ந்திடல் வேண்டும்!

மலை சரிந்து வீழ்ந்தாலும்
மனிதர் எம் கரமிணைந்தால்,
மாமலையும் கடுகாகும்!

மலரும் இப்புத்தாண்டில்
மகிழ்வாய் எம் கரம் இணைப்போம்!
நல்லதையே நினைப்போம்,
நல்லதையே செய்வோம்!

சொல்லதிலே அன்பின்
சுவைபட மொழிவோம்!
செல்லுமிடமெல்லாம்,
பண்பதனை விதைப்போம்! - பகை
வெல்லும் வழி அன்பே, - அதை
அனைவருக்கும் அளிப்போம்! - அதை
அனைவருக்கும் அளிப்போம்!

■ ■

உழைக்கும் கரங்கள்

காலையிற் கதிரவன்
தலை காட்டியெழுகையிலும்
நீலக் கடலடியில் - அவன்
மூழ்கித் துயில்கையிலும்
தோளை இரும்பாக்கித்
தொழில் புரிவோர் விழிகள்
தூக்கம் மறந்திடுமே!
ஊக்கம் உந்துவதால் - தொழில்
ஆக்கம் பெருகிடுமே!

வளமும் வாழ்வும்
உழைப்பின் வெகுமதி!
சோம்பல் அகன்றவர்க்குச்
சேரும் பெருநிதி!
உழைப்பவர் இல்லம் - செல்வம்
வற்றாத பெருநதி!

சமூகத்தில் இவர் வாழ்வு - ஒளி
குன்றாத வெண்மதி!

மூப்பும், நரையும் உழைப்பினிற்கில்லை!
உள்ளத்து வலிமையே வெற்றியின் எல்லை!
முயற்சி கொண்டவர் சாய்வது இல்லை!
வாழ்வின் சுகங்கள் தேய்வதுமில்லை!

உழைப்பவர் கரங்களுக்கிணையேதுமில்லை! - இவர்
பிறந்த பொன்னாடு சான்றோர் என நல்கும் பிள்ளை!
'உழுது ஊண் விரும்பல்' எனும் ஔவை சொல்லை,
- இவர்
உவந்து மனதிலேற்று, ஓட்டுவார் பலர் தொல்லை!

■■

புலம்பல்

வலிகளை ஏன் மறைத்தீர்?

நெடுந்தூர வாழ்க்கைப் பயணத்திலே,
கடுந் துயரம் தாங்கி நடந்தவரே!
படுந் துன்பம் ஏன் மறைத்தீர்? - நான்,
பட்ட போதே தெரிந்து கொண்டேன்!
சுடும் வெயில் ஏன் மறைத்தீர்? - எனைச்
சுட்ட போதே உணர்ந்து கொண்டேன்!

வெட்டவெளி வயற் காட்டில்
வீசும் காற்றை நுகர்ந்த படி,
நட்ட நடுநிசியில்
நான் மட்டும் விழித்த படி,
வான் நிலவை ரசித்த படி,
சிட்டுக் குருவியைப் போற்
சிறகடித்துப் பறந்த படி
வாழ்க்கை நகருமென்றே,
எட்டு வயதிலென்ன?
பதினெட்டு வரை நினைத்திருந்தேன்!

என் பஞ்சுப் பாதம் வலிக்கப்
பாதி வழியில் என்னைப்
பாசத்துடன் அணைத்துத்
தோளிற் சுமந்தவரே!
கடுந் துயரம் ஏன் மறைத்தீர்?

கொடுமுலகில் நானிருந்து
விடுங் கண்ணீர் துடைத்தெறிந்தென்
விரல்களுக்கு வலிக்கிறது!
வலிகளை ஏன் மறைத்தீர்?
வலிக்கிறதே நெஞ்சம்!

■■

ஞானம்

அறிவு விழித்தது!
நிழலைக் கலைத்து,
நிஜத்தில் என்னை
வாழ அழைத்தது!
உணர்வு துடித்தது!
உலர்ந்த வாழ்வை
எண்ணி ஒரு கணம்
உள்ளம் பதைத்தது!
கடந்த வாழ்வின்
சுமைகள் என்னை
உந்தி உதைத்தது!
எனக்குள் என்னைத்
தேடும் ஞான
அறிவை விதைத்தது!

புதிய திசையை
நோக்கி எந்தன்
கால்கள் விரைந்தது!
என்னைச் சுற்றிப்
புதிதாய் இன்னொரு
உலகம் விரிந்தது!
விரிந்த உலகிற்
தெளிவாய் எந்தன்
முகமும் தெரிந்தது!
விரித்த சிறகை
உயர்த்திப் பறக்கப்
பலமும் வந்தது!

■ ■

விடியலைத் தேடி!

விழிகளின் ஓரம் நீர்த் துளி,
விடிந்த பின்பும் விழிகளின்னும்
விடியலைத் தேடி!

விடியாத பொழுதுகள் பல கோடி,
விழிகளே! ஏன் இன்னும்
விடியலைத் தேடி?

வானுக்கும் விடியலில்லை,
அது கார் காலம்! - சிலர்
வாழ்விலும் விடியலில்லை
இது கலி காலம்!

மரணித்து வாழும் எங்கும்
மனித உள்ளம்!
மருந்துக்கும் கிடையாது
மனித நேயம்!

மனிதனுள் மடிந்து விட்ட
மனித நேயம்,
மரணித்த வாழ்வதற்கு
வழிகள் கோலும்!

மாண்டார் வருவரோ மானிலத்தே?
மரணித்த மனித நேயம்
மறுபடியும் உயிர் பெறுமோ
மானுட உள்ளத்தே?

விழிகளே, ஏன் இன்னும்
அழுதபடி? - தெரிந்த பின்னும்
இன்னுமேன் விடியலைத் தேடி?

■ ■

ஆன்மா இறைவனோடிணைந்த நிலை

கோயில் மணியோசை
காற்றோடு கலந்து வரும்!
வேதம் பாடிய உதடுகள்
நாதா, நாதா என்றவன்
புகழ் பாடும்!

ஆன்மா இறைவனோடிணையச்
சஞ்சலம் மறையும்!
நிம்மதி பெருகும்!
கண்களின் நீர்
கன்னத்தில் வழியக் - கைகள்,
தமையறியாது தொழுது நிற்கும்!

பாவ இருளகல - உள்ளம்
தாகமாய்ப் பரம்பொருளைத் தேடும்!
ஞான நிலை பெருக, - அங்கே
ஜீவ ஒளி வந்து பாயும்!

இரும்பாலையில் அடிபட்ட
இரும்பே மணியாகி,
இறைவனின் புகழைப் பாடும்!
துன்பத்தில் வதைபட்ட
மனமே இறைவனின்
திருவடியிற் சோகம் ஆறும்!

இன்பத்தை நாளும்
வேண்டி நின்றால்
இலக்குகள் மாறிப் போகும்!

துன்பமே வாழ்வில்
தொடர்ந்து வந்தால்
தூயவன் கைதர வேண்டும்!

■ ■

கல்வி

செல்வியாக இருந்த என்னைக்
கல்வி கற்க அனுப்பி வைத்து,
வல்லியாக வருவேனென்று
அன்னையவள் காத்திருந்தாள்!

கல்வி கற்று அலுத்த நெஞ்சம்
காதலிலே சாய்ந்து விட,
வல்லியாகும் நினைவிழந்து
காத தூரம் போய் விட்டேன்!

விடலைப் பருவத்திற்
கல்வியைக் கற்பதென்றாற்,
கடலைக் கடந்து போய்க் - கடை
வானைத் தொடுவது போல்!

புளித்த கள்ளினில்
ஈக்கள் விழுவது போற் - காதற்
களத்தில் மனமிறங்கிக்
கல்வியிற் தோல்வி கண்டேன்!

இன்று,
பள்ளிப் படலைகளைப்
பார்க்கும் போதெல்லாம்,
துள்ளிய பருவத்தின்
துடிப்பெல்லாம் அடங்கிப் போய்,
மெல்லிய துயரம் மெதுவாக என்னுள்
சொல்லிய வேதம்,

'கல்வியைக் கற்ற பின்,
பட்டங்கள் பெற்ற பின்,
இறுகிய இதயக்
கதவினைத் திறந்து,
இதமான காதற்
காற்றினை வீச விடு!'

■ ■

பிரிவும், வாழ்த்தும்

எம்முடனே வாழ்கின்றாய்

(என் இலக்கிய நண்பர் திருமிகு. சிவலிங்கம் சிவபாலன் அவர்களின் மறைவையொட்டி எழுதிய இரங்கற் பா.)

மோசம் செய்தான் காலன் - தமிழ்த்தாய்
தாசனுன்னைத் தான் கவர்ந்தான்! - நல்ல
நேசங் கொண்டொழுகுமுன்னை - விண்ணில்
ஈசனுடன் இணைத்து விட்டான்!

பாசமுடன் பழகும் சோதரா! - பிரான்சு
தேசம் அழுகுதையா! - வயோதிப
வாசலைக் கூட எட்டாத உன்னிடத்தில் - விதி
மோசம் செய்ததையா!

உள்ளத்தில் அன்பும்,
உணர்வினிலே தமிழும்,
அள்ள அள்ளக் குறையாத
அட்சய பாத்திரம் போற்

தெள்ளு தமிழ்க் கவியும்
தெவிட்டாமல் எமக்களித்த
அன்புச் சகோதரா!
அன்னைத் தமிழ் நேசா!

பாவரங்கில் உன்னுடன் நான்
பாவிசைக்கக் காத்திருந்தேன்! - உன்
சா-விரங்கற் பாவெழுத
நேர்ந்ததையா சோதரனே! - உன்னை
வாவென்று மடலனுப்பித்
தன்னிடத்தே அழைத்த தேவன் - எமையோ
ஓவென்று அழவைத்தான்,
ஒப்பாரி பாட வைத்தான்!

தாவி வந்து உனையணைத்த
தமிழ்த்தாயும் தவிக்கின்றாள் பார்! - நின்
நாவினில் வந்தமர்ந்து - கவி
நளினங்கள் புரிந்த தேவி! - உன்
ஆவி பிரிந்ததனால்
அழுகின்றாளையா பாராய்!

பாவிகள் பலரிருக்கப்
பாதியில் உனையெடுத்த
பாதகன் காலனென்றே
ஆவி துடித்தழுகின்றாள் பார்!

ஐயா! நின் மரணம்
பொய்யென்று ஒரு தடவை
மெய்யான வார்த்தையொன்றை - இவ்
வையகம் ஏற்காதா? - உடற்
பையில் உன் உயிர் மூச்சு
மீண்டும் வந்து சேராதா?

பொய்யையா உன் மரணம்! - நீ
கை வீசி நடை போட்ட
காலம் தான் எம் நினைவில்!
மெய்யாக இன்றும் நீ
எம்முடனே வாழ்கின்றாய்!

■ ■

அரியவற்றுளெல்லாம் அரிதே பெரியாரைப் பேணித் தமராக் கொளல்!

(மாபெரும் கவிஞர் கண. கபிலனார் அவர்களின் பாராட்டு விழாக் கவிதை)

ஏழ் கடல் தாண்டி வந்தும்
எண்ணத்தாற் செயலாற் தமிழைப்
பாழ் படாதென்றும் காக்கும்
பைந்தமிழ்ப் புலவா வாழி!

ஆழ் கடல் முத்தாய் எம்முள்
துலங்கிடும் சொத்தே! - நின்னைச்
சூழ்ந்து நாம் வாழ்த்துகின்றோம்,
தூயவள் தமிழேயன்றோ?

வெண்ணிறத் தாடிக்குள்ளே
வெளிப்படும் பெரியார் தோற்றம்!
எண்பதைத் தாண்டினாலும் - கவி
இளமையின் துள்ளல் காட்டும்!

ஐய - நின் கண்ணின் பாவம் - அது
ஞானியின் ஆத்ம தேடல்!
செய் தொழில் கவிதை - இதில் நீ
செய்வதோ புதுமை! புதுமை!

சீரியர்க்குரிய சிறப்புகளத்தனையும் - உனக்கு
வாரி வழங்கிய வள்ளலாம் இறைவனவன் - புதுவைச்
சூரியனாய் உனைப் படைத்து - இப்
பாரினில் மிகவும் ஒளிரச் செய்தான்!

நாவினிலே சரஸ்வதியும்
நலங் குன்றா நற் கவியும்
பாவினிலே பைந் தமிழும்
பழகுவதில் இனிமையும்
ஆவின் பால் நிறத்தையொத்த
அருள் பொங்கும் உள்ளமும்
தேவி நினக்களித்தாள்,
தேன் கவியே! வாழியவே!

அன்னைத் தமிழ் பெற்ற
அருந் தவமே! - நின்னிரு
கண்ணைப் போல் தமிழைக்
காக்கும் பேரறிவே!

தள்ளாத வயதினிலும்
தளராத மனவுறுதி உன்னது!
தளராத வயதெனினும்,
தள்ளாடும் மனமென்பது என்னது!

பகுத்து அறிவதிலே
பக்குவம் கண்டவன் நீ!
பகுத்தும், வகுத்தும்
பாதியிலே புரியாமல்,
பாழாகிப் போன நெஞ்சில்
பாரம் சுமப்பவள் நான்!

என் வயது உனக்கு
அனுபவமாகலாம்!
உன் வயதில் எனக்கு
என்னென்ன அனுபவமோ?

தத்தித் தவழ்ந்தெழுந்து
எட்டி என் காலை
ஊன்றிப் பதிப்பதற்குள் - முழங்காலைத்
தட்டி முடக்கி வைக்கும்

தரங்கெட்ட மனிதருள்ளே,
எட்டி, எட்டிப் பல
வெற்றிகளைத் தொட்டவன் நீ!

அறிந்தும், அறியாமலும்
புரிந்தும், புரியாமலும்
அங்கொன்றும், இங்கொன்றும்
சிதறுகின்ற சிந்தனைகள்
என் கவிதை!

விரிந்தும், பரந்தும்
விசாலமாய்ப் பயணித்தும்
உயர்ந்தும், சிறந்தும்
சுரக்கும் அமுதமையா
நின் கவிதை!

பாத்திறம் நிறைந்த
அட்சய பாத்திரமே! - நின்
நாத்திறம் கண்டே நான்
வியக்கின்றேன்!

கார் மேகம் பொழிவதனாற்
பூமி செழிக்கின்றது!
கவிமேகம் நீ பொழிந்தால் - என்
உள்ளம் களிக்கின்றது!

முந்து தமிழ் மொழிக்கு முதல்வா!
பிந்தி வந்த நானிங்கு உன்னை
வாழ்த்துவது நலமா?
சந்தம் பொழியும் உந்தன்
கவிமழையில் எனை நனைத்து
அந்தமில்லாத் தமிழால் நீ
ஒரு தடவை எனை வாழ்த்து!

சந்தும், பொந்தும் உந்தன்
வாழ்த்தே ஒலிக்கட்டும்!
சிந்து கவியிசைத்துத் - தமிழ்
சீர் வளர்க்கப் பல கவிஞர்,
வந்து உன்னைப் போல் - இப்
பூமியிலே பிறக்கட்டும்! - அது வரை

காலமென்றும் உனை வாழ்த்தும்,
தமிழ்த் தாய் உனைக் காப்பாள்!
கோலங்கள் நரைத்தாலும்
கொள்கையில் இளையவனே!

தேன் தமிழ் போல்
நீ சிறந்து
வாழிய பல்லாண்டுகளே!
வாழிய, வாழியவே!

■ ■

நூறு பத்தாண்டு வாழ்க!

எண்ணத்தால், செயலால் - எங்கள்
எழில் தமிழ்த் தாயைப் பாடும்
உள்ளத்தால் உயர்வே கொண்ட
உன்னதப் புலவா வாழி!

உண்ணத் தேன் போலே திகட்டும்
உயர் தமிழ்ப் பாக்களாலே,
கள்ளைத் தான் குடித்தோமோவெனும்
கட்டுண்ட மயக்கம் தந்தாய்!

கண்ணியம், கடமை, கட்டுப்
பாட்டுடன் வாழும் நெறியில்,
கருத்துடன் உணர்வுமூன்றிக்
கலைஞரின் விளக்காய் ஆனாய்!

தண்ணெனக் குளிரும் பேச்சும்,
தவிப்பவர்க் குதவும் போக்கும்,
உண்மையில் நிலைத்த நெஞ்சத்
தூறிடும் அன்பின் ஊற்றும்,

வெண் மனத்துள்ளே நின்று
வெளிப்படும் சிந்தையெல்லாம்
பொன்னகம் எந்தன் தேசப்
புலம்பலே வேறொன்றில்லை!

கண்வளர் குழந்தை காதில்
தாய் பாடும் தாலாட்டைப் போல்,
மண்மிசை ஊரும் அரவம்
மகுடிக்கு மயங்குதல் போல் - நீ
பண்பெனும் ஆடைகட்டிப்
படைத்த நற் பாக்களெல்லாம்,
என் மனத்துள்ளே புகுந்து
ஏற்றங்கள் தந்ததையா!

கள்ளமே அறியா உள்ளம்
காதலில் ஒன்றி - அன்பு
வெள்ளமாய்ப் பெருகியோடி
வேரென நிலைத்து வாழும்
அள்ளவே குறையா இன்ப
அதிசயப் பெருக்காம் - நல்லாள்
வெள்ளையம்மாவோடிணைந்து
வெல்லுக தடைகள் யாவும்!

என்பெலாம் தமிழாய் - உந்தன்
இயக்கமும் தமிழாய் - வாழ்வில்
தென்பெலாம் தமிழாய் - நின்
தேடலும் தமிழாய் ஓங்க

இன்முகம் காட்டியெங்கள்
இதயத்தைக் கொள்ளை கொண்ட
பன்முகம் அறியா அண்ணா
பல்லாண்டு வாழியவே!

வாழும் தமிழ் மகளும்
வளர்கின்ற கலைஞர்களும்
சூழும் மன்றத்துச்
சுடரொளியே வண்ணையண்ணா!
நீளப் பெருங் கடலும்
நிலம், வானும் உள்ள மட்டும் - தமிழ்
ஆளப் பிறந்தவுந்தன்
அன்பிதயம் வாழியவே!

ஆறு பத்தாவதாண்டில்
அடியெடுத்திருக்கும் நாளில் - இன்னும்
நூறு பத்தாண்டு வாழ
மனதார வாழ்த்துகின்றேன்!

வணக்கம்.

■ ■

பகுதி - 2

இறைவனும் நானும்

இறைவா! - எனைத்
துன்பத்திற் புடம் போடு! - நின்
தூய மலரடிக்கணியாவேன்!

இன்பத்தைச் சிறிதாக்கு!
இம்மையிலும் உனைத்
தேடுதல் ஒழியேன்! - என்

கண்ணுக்குள் நீரூற்று!
காதலோ, மோதலோ
அறியேன்! - இந்தப்

பெண்ணுக்குள் ஒரு
பாட்டு! - என்
பேதமையிருளகல அருள்வாய்!

- -

எத்திக்கும் அன்பில்லையே!

சிக்கெனப் பற்றினேன்
நின் பாதம் -
சிக்கல்கள் எனக்கு
நீ தந்தாய்!

துக்கத்திற் துடித்தேன்
நாளும் -
தூயவனே எனைத்
துவள விட்டாய்!

திக்கற்றுத் தவிக்கும்
எனக்கு -
இறைவா நீயும்
சிறகொடித்தாய்! - உன்

பக்கத்தில் இருக்கும்
பிள்ளை எனைப்
பாரினில் மிகவும்
தவிக்க விட்டாய்!

எத்திக்கும் அன்பில்லையே
இறைவா -
எனை ஏன் இன்னும்
உலகில் விட்டாய்?

தொக்கி நிற்கும்
துயரும் -
தொடர்ந்த பின்பா எந்தன்
உயிர் பறிப்பாய்?

■ ■

மெய்யறிவு

மெய்யாம் பரம்பொருளை
மெய்யென்றும்,
பொய்யாம் இவ்வுலகைப்
பொய்யென்றும்,
மெய்யாய் நானுணர்ந்து
பொய் விலக்கி,
மெய்யொடு - என்
ஆவி உணர்வொன்றிப்,
பொய்யாம் உடலழிந்து
மெய்யாம் இறையொடு
என் ஆவி கலப்பது
எப்பொழுதோ இறைவா!

■ ■

நினை ஒதும் பணியருள்வாய்!

ஏதுமொரு பிழை
அறியேன் இறைவா,
சூதும் அறியேன்! - நினை
ஓதும் பணியெனக்கீந்து,
மோதும் துயர் தணிப்பாய்!
இடர் வரும் போதில்
எனை அணைப்பாய்!

■■

கவி ஊறுதே...!

ஆறுதல் அறிகிலேன்
அண்ணலே உனையன்றி! - என்
மீறுதல் பொறுத்திந்த
மண்ணிலே காப்பாய்! - நற்
பேறுகள் ஈந்த தயாபரமே! - கவி
ஊறுதே உனை நினைந்தால்!

■■

மீளும் வகையருள்வாய்!

தேளும், பாம்பும்
கொட்டும் தெரிந்தும்
சேற்றில் வீழ்ந்தேன் பேதை! - எனை

ஆளும் தெய்வம்
அகக் கண் தந்தும்
அறிவை இழந்தேன் ஏழை!

சூழும் துயரை
ஆளத் தெரியா
வகையில் நானொரு கோழை!

மீளும் திறனை
அருள்வாய் இறையே
பணிந்தேன் உந்தன் தாளை!

■■

நெஞ்சம் மறந்திடுமோ?

இறைவா!
இனியொரு கணம்
உனை மறவேன்! - இரு
விழியிடையொற்றி - நின்
கழல் தொழுதேன்! - தாய்
கருவினில் எனை வைத்த
பேரன்பே! - எனை இப்
பெருவுலகிற் காப்பாய்!

■ ■

திரு. வண்ணை தெய்வம் அவர்களின் மணிவிழாவில் நடிகர், அறிவிப்பாளர் திரு.லோகதாஸ், திருமதி. லினோதினி சண்முகநாதனை நிகழ்ச்சித் தொகுப்பாளராக அறிமுகம் செய்கிறார்.

பிரான்சில் நடைபெற்ற கம்பன் விழா 2006 கவியரங்கில் திருமதி. லினோதினி சண்முகநாதன் 'கற்பினிற்கணி' எனும் தலைப்பிற் கவிமலர் வழங்குகின்றார்.

பிரான்சில் நடைபெற்ற கம்பன் விழா 2008 கவியரங்கில் திருமதி. லினோதினி சண்முக நாதன் 'கம்பன் சூட்டும் ஆரம்' எனும் தலைப்பிற் கவிமலர் வழங்குகின்றார். (விழாத் தலைமை அருட்சொல் வேந்தர் சுகி.சிவம்.)

பிரான்சில் நடைபெற்ற கம்பன் விழா 2005 கவியரங்கில் திருமதி. லினோதினி சண்முகநாதன் 'கம்பனுக்குக் கணனி விடும் தூது' எனும் தலைப்பிற் கவிமலர் வழங்குகின்றார்.

பிரான்சில் நடைபெற்ற கம்பன் விழா 2005 இல் சொல்லின் செல்வர் திருமிகு. சத்தியசீலனார் திருமதி. லினோதினி சண்முகநாதனுக்கு நற்றமிழ்ப் பாவலர் பட்டமும், கவிதைப் பணிக்கான பட்டயமும் வழங்கிக் கௌரவிக்கின்றார்.

ஈழத்தமிழ் எழுத்தாளர் திருமதி. தமிழ்ப்பிரியா இளங்கோவன் அவர்களின் நூல் வெளியீட்டு விழாவில் திருமதி. லினோதினி சண்முகநாதன் 'காம்பொடிந்த மலர்' சிறுகதைக்கான நயவுரை ஆற்றுகின்றார். (மேடையில் நடிகர் - அறிவிப்பாளர் பிரியாலயம் துரைஸ், நடிகர் லோகதாஸ், பாவலர் வி.ரி,இளங்கோவன், மூத்த பத்திரிகையாளர் காசிலிங்கம், ஈழத்திரைப்பட மூத்த நடிகர் ரகுநாதன்.)

கலைஞர், காவலர் திரு. வண்ணை தெய்வம் அவர்களின் மணிவிழாவில் ஈழத் திரைப்பட இயக்குநர் திரு. ஞானம் பீரிஸ், திருமதி. லினோதினி சண்முகநாதன், திரு. வண்ணை தெய்வம், திரு. பென்சமின் இம்மானுவெல் (திருமறைக் கலா மன்றம்).

திரு. வண்ணை தெய்வம் அவர்களின் மணிவிழாவில் திருமதி. லினோதினி சண்முகநாதன், ஈழத்திரைப்பட இயக்குநர் திரு. ஞானம் பீரிஸ், திரு. வண்ணை தெய்வம், திருமதி. வெள்ளையம்மா வண்ணை தெய்வம்.

திரு. வண்ணை தெய்வம் திருமதி. லினோதினி சண்முகநாதன் அவர்களுக்கு நினைவுப் பரிசினை வழங்கி மகிழ்கின்றார்.

கம்பன் விழா 2009 கவியரங்கில் திருமதி. லினோதினி சண்முகநாதன் 'இராமன் தொட்டவைகளில் என்னைத் தொட்டது வில்லு' எனும் தலைப்பிற் கவிமலர் வழங்குகின்றார். மேடையில் கவிதாயினி அருணாசெல்வம், நகைச்சுவைத் தென்றல் இரா.சண்முகவடிவேல் (திருவாரூர்).

■ ■

இந்நூலாசிரியர் பற்றி

பெயர்: லினோதினி

புனைபெயர்: பார்வதி

தாய், தந்தையர்: திரு.திருமதி.லில்லி சண்முகநாதன் தம்பதியினர்

கணவர்: சண்முகநாதன், (இயக்குநர் ஸ்டார் இசைக்குழு, பாரீஸ்)

பிள்ளைகள்: றோக்கி, அலெக்ஸா

கல்வித் தகைமை: கல்விப் பொதுத் தராதரம் உயர்தரம் - கலைப் பிரிவு (திருக்குடும்பக் கன்னியர் மடம் ஆங்கிலப் பாடசாலை, யாழ்ப்பாணம்)

ஏனைய தகைமைகள் (தாயகத்தில்):

1. வட இலங்கைச் சங்கீத சபை நடாத்தும் கர்நாடக சங்கீத இசைத் தேர்வுகளில் முறையே, வாய்ப்பாட்டு, வயலின், நான்கு ஆண்டுகள் வரை முறையாகப் பயின்று சித்தியடைந்துள்ளார். (குரு: திருமதி. பரம்சோதி பரராசசிங்கம், ஏழாலை மேற்கு)

2. சமையற் கலை, தையற்கலை, கைவேலை, கேக் அலங்காரம், சிகையலங்காரம் முதலியவற்றிற்கான ஓராண்டு காலப் பயிற்சியினை யாழ். Trimmer hallஇல் முறையே முடித்துள்ளார்.

ஏனைய தகைமைகள்: (புலத்தில் - பிரான்சு)

3. ரி.ரி.என். தொலைக்காட்சியில் □மழலைகள் பூங்கா' எனும் சிறுவர் நிகழ்ச்சியினைத் தொகுத்து வழங்கியுள்ளார்.

4. ரி.ரி.என். தொலைக்காட்சியில் திருமிகு. வண்ணைதெய்வம் அவர்களால் நடத்தப்பட்ட □சித்திரம் பேசுதடி' கவிதை நிகழ்வில் ஓராண்டு காலம் பங்கு பற்றியுள்ளார்.

5. தமிழ்க் கவிதைத் துறைக்கு ஆற்றும் சீரிய பணிகளைப் பாராட்டி பிரான்சு கம்பன் கழகம் 2005ஆம் ஆண்டு இவருக்கு □நற்றமிழ்ப் பாவலர்' பட்டமும், கம்பன் பட்டயமும் வழங்கிக் கௌரவித்தது.

6. கணவருடன் இணைந்து ஸ்டார் இசைக்குழுவிற் பாடகியாக மூன்று வருடங்கள் கடமையாற்றியுள்ளார்.

7. மேடை நிகழ்வுகளில் அறிவுப்புகளைக் கவிதையாகத் தொகுத்து வழங்கும் சிறப்பு ஆற்றல்.